ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் வரவர முநயே நம:

ஸ்ரீமத் வாநாசல முநயே நம:

ஸ்ரீ வானமாமலை முதலாவது ஸ்வாமி விஷயமான

மங்களாசாஸநம், ப்ரபத்தி

[“மஹார்ய” என்ற தொட்டயாசார்யர் அருளியவை]

பண்டிதரத்னம், திருக்கண்ணபுரம்

சௌ. ஸ்ரீநிவாஸாசார்யர்

(சிரோமணி) இயற்றிய உரையுடன்

ஸ்ரீ வானமாமலை மடம் 27-வது பட்டம்,

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான

சின்ன ராமாநுஜ ஸ்வாமியின்

நியமநத்தால் வெளியிடப்பட்டன

மதராஸ்

மன்மத௵ சித்திரை௴

பதிப்புரிமை] [விலை 6 அணா

முதற் பதிப்பு: மீன்மத-ஞூ.

வள்ளுவர் அச்சகம், புரசைவாக்கம், சென்னை-7.

முதலாவது வானமாமலை ஸ்வாமி



27-வது பட்டம் ஸ்ரீ சின்ன ராமாநுஜ ஸ்வாமி

ஸ்ரீமத் வானமஹாசல முநயே நம :

முகவுரை

திருவநந்தாழ்வானுடைய அவதாரமாகிய அழகிய மணவாள மாமுனிகளின் அஷ்டதிக்கஜங்களில் ப்ரதாநரும், அவரது அம்சமாய் ஸ்ரீவானமாமலை எம்பெருமானால் ராமானுஜ முநி எனத் திருநாமம் சாற்றப்பெற்றவருமான வானமாமலை முதலாவது ஸ்வாமிக்கு, ஸ்ரீமணவாள மாமுனிகளால் அவர் திருவடிகளில் ஆச்ரயித்த சில ஆசார்யர்கள் அஷ்ட திக்கஜங்களாக நியமனம் செய்யப்பெற்றனர். அவர்களின் திருநாமங்கள் " ஸ்ரீமந்மஹார்யரணபுங்கவ........" என்னும் ச்லோகத்தால் அறியப்படுகின்றன. இவர்களுள் முதலாவதாகக் கூறப்பட்ட மஹார்யர் என்னும் தொட்டயாசார்யர் தம் ஸ்வாமி விஷயமாக " ரம்யஜாமாத்ரு...பஜே " என்னும் தனியனை அருளிச் செய்தவர். இவரே ஸ்வாசார்ய விஷயமான பக்தியின் மேலீட்டால் " ஸ்ரீவாநமஹாசல யோகி மங்களாசாஸநம் ", " ஸ்ரீவாநமஹாசல யோகி ப்ரபத்தி." என்ற இரு ஸ்தோத்திரங்களையும் அருளிச் செய்தார்.

இவை இரண்டும் அக்காலம் முதலே வானமாமலை மடத்தில் நித்ய ததீயாரதன காலங்களில் முதலில் அநுஸந்திக்கப்பட்டுப் பிறகு ஸ்ரீமணவாளமாமுனிகளின் தினசர்யை முதலியன அநுஸந்திக்கப்படுகின்றன. மேலும் ஸ்ரீ அரங்கநகரப்பன் டோலோத்ஸவ காலங்களிலும் இவையிரண்டும் அநுஸந்திக்கப்பட்ட பிறகுதான் மற்ற ஸ்தோத்ரங்கள் அநுஸந்திக்கப்படுகின்றன. எனவே ஸ்ரீவானமாமலை மடத்து ஸம்ப்ரதாயத்தை அநுஸரித்து வருமவர்களுக்கு

நித்யம் அநுஸந்தேயங்கள் இவை. இவற்றிற்கு ஸம்ஸ்கிருத பாஷையிலோ இதர பாஷைகளிலோ இதுவரையில் வ்யாக்யானம் ஒருவரும் எழுதியதாய்த் தெரியவில்லை. ஆகையால் மடத்து ஸம்ப்ரதாயமுள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களுள் ஸம்ஸ்க்ருத பாஷையில் அதிகம் பரிசயமில்லாதவர்களுக்கும் ஸ்த்ரீ பாலர்களுக்கும் அநுஸந்தானம் செய்யும்போதே எளிதில் அதன் அர்த்தத்தை அறிந்து அநுஸந்திப்பதற்கு அநுகுணமாக வர்த்தமான ஸ்வாமியின் திருவுள்ளத்தைப் பின்சென்று அடியேன் இரண்டு க்ரந்தங்களுக்கும் எளிய நடையில் தமிழில் பதவுரையும், சில ச்லோகங்களில் தாத்பர்யம் துரூஹமாயிருப்பதால் அதை நன்கு விளக்கும் கருத்துரையுமாகச் சேர்த்து உரையை எழுதினேன். தற்பொழுது ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீமதுபய வேதாந்தாசார்யரான வர்த்தமான ஸ்வாமி ஸ்ரீவானமாமலை சின்னராமாநுஜ ஸ்வாமியின் நியமனத்தாலும் ஆதரவாலும் இந்த உரை மடத்து வெளியீடுகளில் ஒன்றாய் வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த தொட்டய்யங்கார் ஸ்வாமீ தமது ஸ்வாமி விஷயமாய் தினசர்யை என்ற க்ரந்தமும் அருளிச் செய்திருப்பதாய்த் தெரிகிறது.

ஸ்வாமியின் சரணாரவிந்தமகரந்த மதுவ்ரதன்
பண்டிதரத்னம் திருக்கண்ணபுரம்
சௌ. ஸ்ரீநிவாஸ தாஸன்

ஸ்ரீவர மங்காஸமேத தேவநாயக ஸ்வாமிநே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் வரவரமுநயேநம:
ஸ்ரீமத்வாநாசலமுநயேநம:

ஸ்ரீசைலேச தயாபாத்ரம், தீபக்த்யாதி குணார்ணவம் |
யதீந்ரப்ரவணம் வந்தே ரம்ய ஜாமாதரம் முநிம் ||

ரம்யஜாமாத்ருயோகீந்த்ர - பாதரேகாமயம் ஸதா |
ததாயத்தாத்மஸத்தாதிம் ராமாநுஜமுநிம் பஜே ||

தொட்டை அய்யங்கார் எனப்படும் மஹார்யர் அருளிய

ஸ்ரீ வானமஹாசலயோகி

மங்களாசாஸநம்

தமிழ் உரையுடன்

அவதாரிகை

ஸ்ரீமத் வாதூலகுல திலகராய் ஸ்ரீநிவாஸார்யர் என்ற அபர நாமத்தையுடைய மஹார்யர், கோயிலில் அழகியமா முனிகளை ஆச்ரயிக்க விருப்பமுற்று எழுந்தருள, மாமுனி களும் இவரைத் தமது ப்ரதம சிஷ்யரான வானமாமலை ராமாநுஜ ஜீயர் திருவடிகளிலே ஆச்ரயிக்கும்படி நியமித் தார். அவரும் அவ்வாறே ஜீயர் திருவடிகளில் ஆச்ரயித்து,

மந்த்ர மந்த்ரார்த்த ரஹஸ்யாதி க்ரந்தங்களையும் ஸ்ரீபாஷ்ய பகவத் விஷயாதிகளையும் அவரிடம் அதிகரித்துச் சிறந்த ஞானமுடையராய் ஸ்வாசார்ய சுச்ரூஷா பரராய் எழுந்தருளியிருந்தார். பிறகு மாமுனிகள் தமக்குண்டான அதிசயமெல்லாம் வானமாமலை ஜீயருக்கும் உண்டாகவேண்டுமென்று இருக்குமவராகையாலே, தம்மைப் போலவே அவருக்கும், அவர் திருவடிகளில் ஆச்ரயித்து முதிர்ந்த ஞானமுடையவர்களில் சிறந்த சிலரை அஷ்ட திக் கஜங்களாகக் கல்பித்தருளினார். அவ்வெண்மர் திருநாமங்களும் "ஸ்ரீமந் மஹார்ய ரணபுங்கவ" என்ற ச்லோகத்தில் கூறப்பட்டுள்ளது. மாமுனிகள் ஒரு நாள் தமது திக்கஜங்களோடு தம்மை ஸேவித்து நிற்கும் வானமாமலை ஜீயரையும் அவருடைய ஸம்ருத்தியையும் கடாக்ஷித்து அதிஸந்துஷ்டராய் எழுந்தருளியிருந்து, மஹார்யரைக் குறித்து, "உமது ஆசார்யன் விஷயமாய் ஒரு ச்லோகம் சொல்லிக் காணும்" என்ன, அவரும் அவசராய், "ரம்ய ஜாமத்ரு...முநிம்பஜே" என்று அருளிச்செய்ய, அது தமது அபிமதத்திற்கு இசைந்திருந்தபடியாலே ஸந்தோஷிக்க, மற்ற சிஷ்யர்களும் இந்த ச்லோகத்தைக் கேட்டு மாமுனிகளைப் பார்த்து, "அடியோங்களுக்கு இற்றைக்கு ஓர் மஹா நிதி ப்ராப்தமாயிற்று" என்று கொண்டாட, மாமுனிகளும் தமது ஸ்ரீசைலேச தயாபாத்ர தனியனோடு இந்த "ரம்யஜாமாத்ரு யோகீந்த்ர" என்னும் தனியனையும் நியதமாகச் சேர்த்து அநுஸந்திக்கும்படி நியமித்துத் தமது அம்சாவதாரமே வானமாமலை ராமாநுஜ ஜீயர் என்று அவர் வைபவத்தை ப்ரகாசப்படுத்தினார். பிறகு அந்த மஹார்யர், மணவாளமுனிகளால் அநேக ஸமயங்களில் ஸூசிப்பிக்கப்பட்ட தமது ஆசார்யன் வைபவத்தையும், உபய வேதாந்த மந்த்ர ரஹஸ்யாதி விஷயமான ஸூக்ஷ்ம ஞானத்தையும், ஸௌலப்யம், ஸௌசீல்யம், பக்தி, வைராக்யம் முதலிய அவரது குணகணங்களையும் கண்டு அதிசயித்து, அக்குணங்களில் ஆழ்ந்து பக்திபரவச

ராய், மெய்மறந்து பல்லாண்டு பாடியல்லது நிற்கவொண்ணாத நிலையை எய்தி, அவரது மங்களாசாஸநத்திலே ப்ரவ்ருத்தராகிறார் இந்த க்ரந்தத்திலே. இந்த ராமாநுஜ முனி விஷயமான ப்ரபத்தி க்ரந்தத்தை அருளிச்செய்தவரும் இவரேயாவர். இவருக்குத் தொட்டை அய்யங்கார் அப்பை என்ற திருநாமமும் உண்டு.

रम्योपयन्तृ-मुनिवर्य-दया-निवासं
रामानुजं यतिपतिं करुणामृताब्धिम्।
वन्दे मनोज्ञ-वरदाह्वय मात्मवन्त
माजन्मसिद्धपरिपूत-चरित्रबोधम्॥ ॥ १ ॥

பதவுரை:—ரம்யோபயந்த்ருமுநிவர்ய-அழகிய மணவாள மாமுனிகளது, தயாநிவாஸம்-கருணைக்கு இருப்பிடமாயும், கருணாம்ருதாப்திம்-கருணையென்னும் அம்ருதத்திற்கு உறைவிடமான கடல்போன்றவரும், ஆத்மவந்தம்-தைர்யத்தையுடையவரும், (ஆஜந்மஸித்த...போதம்) ஆஜந்மஸித்த-பிறப்பு முதலேயுண்டாகிய, பரிபூத - மிகவும் புனிதமான, சரித்ர-ஆசரணையையும், போதம்-ஞானத்தையும் உடையவரும், மநோஜ்ஞவரதாஹ்வயம்-தமது பிதாவினால் அழகிய வரதர் என்ற திருநாமம் சாற்றப்பெற்றவரும், யதிபதிம்-யதிகட்கிறைவருமான, ராமாநுஜம் - வாநாசல ராமாநுஜ முனிவரரை, வந்தே - வணங்குகின்றேன்.

கருத்து:—இந்த வாநாசல ராமாநுஜ முனிவர், ஸ்ரீமணவாள மாமுனிகள் க்ரஹஸ்த தர்மத்தை அநுஷ்டித்துத் திருக்குருகூரில் எழுந்தருளியிருந்த காலத்திலேயே அவரது திருவடிகளில் முதலில் ஆச்ரயித்த முதலாவது சிஷ்யராவார். ஆகையால் அவரது தயைக்கு இவரே உறைவிடமாயினர். இவர் ஆத்மவானும் ஆவர். அதாவது ஓரிடத்திலும் மழுங்காத தைர்யமென்னும் குணத்தை உடையவர். இத்தால் தம்மை ஆச்ரயித்தவர்களை உய்விக்க இவர் யத்னம் செய்

தால் அது விஷயத்தில் தளர்வை எய்தார் எனக் கூறப் பட்டதாகும். ஸ்ரீ ராமாயணத்தில் "ஆத்மவாந் கோ ஜித க்ரோத:" என்னுமிடத்தில் இப்பதத்திற்கு தைர்யவான் என்ற அர்த்தமே கோவிந்தராஜரால் கூறப்பட்டுள்ளது காண்க. அல்லது ஆத்ம சப்தம் ஸ்வபாவத்தைக் கூறு மாகையால் தமக்கு அபிமுகனான சேதநனை ரக்ஷிக்கும் ஆசார்ய ஸ்வபாவத்தைக் கூறி, அத்தகைய ரக்ஷணஸ்வ பாவம் வாய்ந்தவர் என்றுமாம். அல்லது ஆத்ம சப்தம் மனதைக் கூறுபாகையால் தமக்கு அதீநமாய் தம வசத்தி லாய மனத்தையுடையவர் என்றுமாம். இத்தால் இவரது வைராக்யமுடைமை கூறப்பட்டதாகும். இவர் கருணை யாகிய அம்ருதம் நிறைந்த கடல் போன்றவர். இவரைக் கடலாகக் கூறியதால் கடலில் தண்ணீரை ஒருவராலும் வற்றச்செய்ய முடியாதாப் போலவே இவர் கருணையையும் வற்றச்செய்ய இயலாது என்பது ஸூசிதமாம். கருணையை அம்ருதமாகக் கூறியதால், அம்ருதம் தன்னை அருந்திய வருக்கு அமரத் தன்மை யளிப்பதுபோலவே, இவரது கருணையும் தமக்கு விஷயமானவர்களுக்கு அமரத்வத்தை (நித்யத்வத்தை) அளிக்குமென்பது தேறுகிறது. நிற்க இப் பொழுது இவர் நான்காவது ஆச்ரமமான ஸந்யாஸத்தை எய்தி ராமாநுஜ முனி என்று திருநாமம் உடையராயினும், தமது பால்யத்தில் தமது பிதாவால் மிகுந்த அழகு வாய்ந் திருந்தமை காரணமாக, இவர் அழகிய வரதரென்று அழைக் கப்பட்டவரா யிருப்பர். பிறப்புடனே கூட உண்டாகிய மிகப் பரிசுத்தமான அநுஷ்டானங்களையும் ஞானத்தையும் உடையவர் இவர். இத்தகைய பெருமைவாய்ந்த யதித் தலைவரான ராமாநுஜ முனியை வணங்குகின்றேன். (க)

2. அவதாரிகை.—முதல் ச்லோகத்தில் இந்த ராமாநுஜ முனிவர் மணவாளமாமுனிகளின் தயைக்குப் பாத்ரமானவர் என்றார். இதில் இவருக்கு உண்டாகிய வாத்ஸல்ய ஸௌ

லப்ய ஸௌசீல்யாதி குணங்களுக்கு ஊற்றுவாய் மாமுனிகள் எனக் கூறி, "இவரே எனது குலத்திற்கு நாதன்" எனவும் கூறி வணங்குகின்றார்.

रम्योपयन्तृ-मुनिवर्य-दयानुभाव-
संसिद्ध-सद्गुणगणौघ-महार्णवाय ।
रामानुजाय मुनये यमिनां वराय
नाथाय मामककुलस्य नमोऽस्तु नित्यम् ॥ ॥ २ ॥

பதவுரை:—(ரம்யோபயந்த்ரு...மஹார்ணவாய) ரம்யோபயந்த்ரு-அழகிய மணவாளனென்னும், முநிவர்ய-யதித் தலைவனது, தயாநுபாவ - கருணையின் ப்ரபாவத்தினால், ஸம்ஸித்த-நன்றாய் ஸித்திக்கப்பெற்ற, ஸத்குணகண-சிறந்த குணங்களின் திரளாகிற, ஓக-ப்ரவாஹத்திற்கு, மஹார்ணவாய - புகலிடமாகிய ஸமுத்ரம் போன்றவரும், யமிநாம்-மனதை அடக்கியாளும் யோகிகளுள் வராய - தலைசிறந்தவரும், மாமககுலஸ்ய-எனது குலத்திற்கு, நாதாய-யஜமானரும், ராமாநுஜாய - இராமாநுசன் எனப் பெயர்பூண்டவருமான, முநயே - முனிவரின் பொருட்டு, நம: - எனது நமஸ்காரம், அஸ்து - ஆயிடுக.

கருத்து:— இந்த வாநாத்ரி முனிவர் பிறப்பே தொடங்கி உண்டாகிய ஸதாசாரம், ஞானம் இவைகளையுடையராயினும் மணவாள மாமுனிகளை ஆச்ரயித்த பின்னர், அவரது கருணையின் மஹிமையால் உண்டாகிய வாத்ஸல்ய ஸௌசீல்ய ஸௌலப்யாதி குணத்திரள் ப்ரவாஹமாகச் சென்று சேரும் பெருங்கடலாயினர். இவரை குணக் கடலாகக் கூறியதால், குணங்கள் வற்றாத ஆகரம் இவர் என்றதாயிற்று. இவர் இந்த்ரியங்களை அடக்கி மனதைத் தம் நிலையிலே நிறுத்தும் யோகிகளுள் சிறந்த தலைவர். எனது குலத்தை நிர்வஹித்து நடத்திப்போரும் நாதனுமாவார்.

இப் பெருமை வாய்ந்த இவ்வானாசல முனிவருக்கு நித்யமாக எனது நமஸ்காரம் உரித்தாகுக. (உ)

3. அவதாரிகை:—கீழ் ச்லோகத்தில் இந்த ராமாநுஜ முநிவருக்கு உண்டாகிய ஸத்குணங்கள் மணவாள மாமுனிகளின் தயா ப்ரபாவத்தாலென்றூர். இதில் இவருக்கு தாரக போஷகாதிகளும் மாமுனிகளின் திருவடித் தாமரைகளே எனக் கூறி, இவர் தமது குலத்திற்கு நாதனுனமையை விளக்கிக் கூறுகிறூர்.

श्रीरम्यजामातृ मुनीन्द्रपाद-
कञ्जातभृङ्गं करुणान्तरङ्गम् ।
रामानुजं नौमि मुनि म्मदीय-
हृच्चन्द्रकान्तोपलपूर्णचन्द्रम् ॥ ॥ ३ ॥

பதவுரை:—(ஸ்ரீரம்யஜாமாத்ரு.....ப்ருங்கம்) ஸ்ரீரம்ய ஜாமாத்ரு முநீந்த்ர - அழகிய மணவாள மாமுனிகளின், பாத - திருவடிகளாகிற, கம்ஜாத - தாமரை மலர்களில் படியும், ப்ருங்கம் - வண்டு போன்றவரும், கருணாந்தரங்கம்- கருணையுடன் கூடிய மனதை உடையவரும், (மதீய.....சந்த்ரம்) மதீய - என்னுடையதான, ஹ்ருத் - மனதாகிற, சந்த்ர காந்தோபல - சந்த்ரகாந்தக் கல்லுக்கு, பூர்ணசந்த்ரம் - கலைகள் நிறைந்த சந்த்ரன் போன்றவருமான, ராமாநுஜம்—முநிம் - ராமாநுஜன் என்னும் முநிவரை, நௌமி - துதிக்கின்றேன்.

கருத்து:—இவ்விராமாநுஜ முநிவர் மணவாள மாமுனிகளினுடைய திருவடித் தாமரைகளில் படிந்த வண்டு போன்றவர் என்பதால் அத்திருவடி மலர்களையே தமக்கு தாரக போஷகங்களாகக் கொண்டவர் எனக் கூறியவாறும். வண்டுகளுக்கு மலரே தாரக போஷகங்களல்லவா? இவர் கருணையோடு கூடிய மனதுவாய்ந்தவர், மேலும் எனது மன

தாகிற சந்த்ரகாந்தக் கல்லுக்கு கலாபூர்ணனை சந்திரன் போன்றவர். இவரைச் சந்திரனுகவும் மனதைக் கல்லாகவும் கூறியதால், கல்லேயும் உருகச்செய்யும் சக்திவாய்ந்தவர் இம் முனிவர் என்றும், அக்கல் சந்திரனுக்கன்றி மற்றென்றைக் கண்டு உருகமாட்டாததுபோலவே, எனது கல்நெஞ்சம் அவருக்கன்றி மற்றையோருக்குக் கரையாது என்றும், கலாபூர்ணனை சந்த்ரனென்று ரூபகமாகக் கூறியதால் இவரும் அச்சந்த்ரனைப்போலவே கலாபூர்ணர் (வித்யைகள் நிரம்பியவர்) என்றும் கூறப்பட்டதாகும். இதனுல் இவர் கல்வியின் பெருமை காரணமாகத் தம் நெஞ்சம் உருகியதாகக் கூறப்பட்டதாகும். கல்வி காரணமாகத் தமது குலத்துக்கு நாதர் என்று கீழில் ச்லோகத்திற்கு இது விவாணமுமாகும். இவ்வாறு சிறப்பு வாய்ந்த இராமாநுச முநியைத் துதிக்கின்றேன். (௩)

4. அவதாரிகை:—இந்த ச்லோகத்தில் இம் முனிவரது கல்யாண குணங்களில் சிலவற்றைக் கூறி, இவர் அழகிய மணவாள மாமுனிகளுக்கு அந்தரங்கராய் "பஹி: சர: ப்ராண:" என்னுமாபோலே அம்முனிவரின் ப்ராணஸ்தாநீயருமாவார் என்கிறுர்.

वन्दे वात्सल्य-सौशील्य-ज्ञानादि-गुणसागरम् ।
रामानुजमुनिं रम्यजामातृ-मुनि-जीवितम् ॥ ॥ ४ ॥

பதவுரை :—(வாத்ஸல்ய......ஸாகரம்) வாத்ஸல்ய - வாத்ஸல்ய குணமென்ன, ஸௌசீல்ய - ஸௌசீல்ய குணமென்ன, ஞான- ஞானமென்ன, ஆதி - இவை முதலாய, குண - குணங்கட்கு, ஸாகரம் - கடல் போன்றவரும் (ரம்ய......ஜீவிதம்) ரம்யஜாமாத்ருமுநி - அழகிய மணவாள மாமுனிகட்கு, ஜீவிதம் - ப்ராணன் போன்றவருமான, ராமாநுஜமுநிம் - ராமாநுஜமுனியை, வந்தே - வணங்குகின்றேன்.

கருத்து:—வாத்ஸல்யமென்பது - தன்னை ஆச்ரயித்தவர்கள் இழைத்த குற்றங்களைக் குணமாகக் கொள்ளும் மிக்ப் பெரியோரின் அற்புத குணமாம். இக் குணம் நமது குற்றங்களைக் கண்டும் அஞ்சாது அப்பெரியோரை நாம் அணுகுவதற்கு உறுப்பாகும். செய்த குற்றம் நற்றமாகவே கொள்ளுதல் பெரியோரின் இயல்பு. ஸௌசீல்யமென்பது. தான் எவ்வளவு பெருமையுடையவனாயினும் தன் மேன்மையைக் கொஞ்சமும் தன் மனத்தால் நினையாது மிகத் தாழ்ந்தோருடனும் புரையறக் கலக்கும் குணவிசேஷமாகும். இஃது நாம் கிட்ட விரும்பும் பெரியோரின் பெருமையைக் கண்டு நாம் அகல வேண்டாமைக்கு உரித்தாய குணம். ஞானமென்பது தன்னை ஆச்ரயித்தவர்களின் அபேக்ஷையை அறிய ஏதுவாய குணம். ஆதிசப்தத்தால் ஸ்வாமித்வம், ப்ராப்தி-பூர்த்தி முதலிய குணங்களும் கூறப்பட்டனவாகும். இக்குணங்கட்கு இவரைக் கடலெனக் கூறியதால் இவைகள் வற்றுது நிரம்பி இருக்குமிடமென்று கூறியதாகும். நிற்க இம்முனிவரை மாமுனிகளுக்கு ப்ராணன் எனக் கூறியதால் இவரை க்ஷண காலமும் விட்டுப் பிரிந்து மாமுனிகள் தரிக்கவல்லரல்லர் என்றதும், ஸ்ரீராமபிரானுக்கு இளையபெருமாள் போல் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் எல்லா விதக் கைங்கர்யங்களையும் செய்யும் அந்தரங்கர் என்ற அம்சமும் தோற்றுகின்றன. இத்தகைய பெருமை வாய்ந்தவரை வணங்குகின்றேன். (௪)

5. அவதாரிகை:—கீழ் ச்லோகத்தில் வாத்ஸல்ய ஸௌசீல்யாதி குணங்களுக்குக் கடலென்றும், மாமுனிகளை விட்டகலாதவர் என்றும் இவரது பெருமை கூறப்பட்டது. இந்த ச்லோகத்தில் இவருடைய வைராக்கியமென்னும் முக்கிய குணம் கூறப்படுகிறது.

वन्दे वान-महाशैल-रामानुज-महामुनिम् ।
यद्नादर-सव्रीड-मन्तरालाश्रमद्वयम् ॥ ॥ ५ ॥

பதவுரை:—அந்தராளாச்ரம த்வயம் - ப்ரும்ஹசர்யத்திற்கும் ஸந்யாஸத்திற்கும் மத்தியிலுள்ள கார்ஹஸ்த்யம், வாநப்ரஸதம் என்னும் ஆச்ரமங்களிரண்டும், (யத...... வ்ரீடம்) யத்-எந்த முனிவரது, அநாதர - ஆதரவின்மையாலே, ஸம்வ்ரீடம் - மிகுந்த லஜ்ஜையை உடையதாக, (ஆயிற்றோ); (வாநமஹா......முநிம்) வாநமஹாசைல-(அந்த) வானமாமாலை, ராமாநுஜ மஹாமுநிம் - ராமானுஜனென்னும் மாமுனியை, வந்தே-நமஸ்கரிக்கின்றேன்.

கருத்து:—இங்கு "வாநமஹாசைல" எனக் கூறியது எம்பெருமானை. "வானமாமலையே அடியேன் தொழவந்தருளே" என்று நம்மாழ்வார் அவனையே கூறியுள்ளார். அந்த வானமாமலை என்ற தமிழ்ப் பதமே ஸம்ஸ்க்ருதபதமாக "வாநமஹாசைல" என்று மஹார்யரால் கூறப்பட்டதாகும். எனவே அவ்வெம்பெருமானுக்கு உரிமை பூண்டவராய் அவருடைய கல்யாண குணங்களையே அநவரதம் அநுஸந்தாநம் செய்யுமவராகையாலே, "மஹாமுநிம்" என்றார். இந்த ச்லோகத்தின் பிற்பகுதியால் இவரது சிறந்த வைராக்யம் என்னும் குணம், மிகுந்த சமத்காரத்துடன் கூறப்படுவது காணலாகும். அதாவது, இந்த ராமாநுஜ முநிவர் தமது பிதாவால் உபநயன ஸம்ஸ்காரம் பெற்று ப்ரும்ஹசர்யத்துடன் வேத வேதாங்கங்களை நன்கு கற்றறிந்து வைராக்யத்தை எய்தி, அதன் மேலீட்டால் ப்ரும்ஹசர்யத்திற்கும் ஸந்யாஸத்திற்கும் நடுவிலுள்ள கார்ஹஸ்த்யம், வானப்ரஸ்தம் என்ற இரண்டு ஆச்ரமங்களையும் கண்ணெடுத்தும் பாராது இவர் அநாதரவு செய்ததால் அவைகள் மிகுந்த வெட்கத்தை எய்தின என்கிறார், மஹார்யர் ரஸோக்தியாலே. வைகுண்ட என்றும் சப்தம் எம்பெருமானையும், அவருக்கு வாஸ ஸ்தானமான பரமபதத்தையும் கூறுவதுபோல இங்கும் வாநாசல என்ற பதம் எம்பெருமானையும் அவருடைய திருப்பதியான ச்ரீவரமங்கல நகரையும் குறிப்பதாகவும் கொள்ளலாம். தற்காலத்தில் வ்யவஹாரமும் இவ்வாறே

உண்டாயிருக்கலாம். "தேசிக சிகாமணிகளான எம்பெருமானுர் மணவாளமாமுனிகள் போன்றவரும் சிறிது காலம் க்ருஹஸ்த தர்மங்களை அநுஷ்டித்து நம்மை ஆதரித்திருக்க, அந்தோ! நம்மை இவர் கண்ணெடுத்து ஏற இறங்கவும் பார்க்கவில்லையே" என்று இவரால் ஏற்கப்படாத க்ருஹஸ்தாச்ரமம் வெட்கமுற்றதாம். இது வாநப்ரஸ்தத்திற்கும் உபலக்ஷணம். இத்தால் அவ்விருவரிலும் காட்டிலும் வைராக்ய விஷயத்தில் இவர் சிறப்புற்றவர் எனக் கூறப்பட்டதாகும். மணவாள மாமுனி க்ருஹஸ்த தர்மங்களை அநுஷ்டித்து வரும் காலத்திலேயே அவரது ஸம்பந்தம் பெற்ற இவர், தமது வைராக்யத்தின் மேலீட்டால் ஸந்யாஸாச்ரமத்தை எய்தினுர் என்பதை யதீந்த்ரப்ரவண ப்ரபாவம், ககநகிரிமுநி சரிதம் முதலியவற்றில் காணலாம். இச்சிறந்த வைராக்யம் பூண்ட இராமாநுஜ முநியை வணங்குகின்றேன். (ரு)

6. அவதாரிகை :—இந்த ச்லோகத்தில் அழகியமணவாள மாமுனிகளின் திருவடிகளில் முதலிலேயே இவர் ஆச்ரயித்து, அவருடைய கருணை பாயும் முதல் மடையுமாவர் இவர் என்று கூறுகிறுர். அதாவது இவரே அவரது முதல் சிஷ்யர். இவரது கால் நலத்தாலே மற்றெல்லா சிஷ்யர்களும் தம்மை ஆச்ரயித்துத் தாம் பெருமை எய்தியதாக மாமுனிகளும் நினைத்தன்றோ இவருக்கு "பொன்னடிக்கால் ஜீயர்" என்று திருநாமம் சாற்றியதும். எனவே அவர் கருணைக்கு முதல் இலக்கு இவர். மேலும் காமம், க்ரோதம் என்ற தீக்குணங்கள் தம்மிடம் இல்லாததோடு தம்மை அடுத்தமற்றையாரின் அத்தீய குணங்களையும் அகற்றுமவர் இவர், என்ற பெருமையையும் கூறுகிறுர்.

रम्यजामातृयोगीन्द्र-प्रसाद-प्रथमास्पदम् ।
रामानुजमुनिं वन्दे कामादि-दुरितापहम् ॥ ॥ ६ ॥

பதவுரை:—(ரம்ய...ஆஸ்பதம்) ரம்ய ஜாமாத்ருயோ கீந்த்ர - அழகிய மணவாள மாமுனிகளின், ப்ரஸாத - அருளுக்கு, ப்ரதமாஸ்பதம் - முதலாவது ஸ்தானமாகிய வரும், காமாதி துரிதாபஹம் - காமம் முதலான பாபங் களை அகற்றுமவருமான, ராமாநுஜமுநிம் - வாநாத்ரி ராமாநுஜ முநிவரை, வந்தே-வணங்குகின்றேன்.

கருத்து:—மற்றைய சிஷ்யர்கள் ஸ்ரீ மணவாள மாமுனி களின் பெருமையை உணர்ந்து அவரை ஆச்ரயிப்பதற்கு வெகுகாலம் முன்னமேயே அவர் க்ருஹஸ்தாச்ரமத்தை யுடையராய் திருநகரியில் எழுந்தருளியிருந்த போதே, இந்த ராமாநுஜ முனிவர் அவர் திருவடிகளில் ஆச்ரயித்து அவரது கருணைக்கு முதல் பாத்திரமாய் அவர் பாதரேகா ஸமரா யிருந்து, பின்பு (மாமுனிகளை) ஆச்ரயித்த அண்ணன், அப் பிள்ளை, அப்பிள்ளார் முதலியோருக்கு ஆச்ரயணத்தில் இவர் புருஷகார மாயிருந்தமையாலும் அவருடைய கரு ணைக்கு முதல் விஷயம் இவரே. மேலும் இவர் வைராக்ய சாலியாகையால் காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்று சொல்லப்படும் உடன் பிறந்த சத்ருக் களாகிய ஆறு தீய குணங்களையும் தாம் அகற்றிய தோடு தம்மைச் சார்ந்தோரையும் அத்தீய குணங்கள் சாரா வண்ணம் நீக்கும் சக்திவாய்ந்தவர். "காமாத் க்ரோதோ பிஜாயதே க்ரோதாத் பவதி ஸம்மோஹ:" இத்யாதி களாலே காமாதிகளின் கொடுமை ஸ்ரீ கீதையில் கண்ண னால் அருளிச் செய்யப்பட்டது. இவைகளைப் பாப வாசக மான துரித சப்தத்தாலே கூறியது, அப்பாபத்துக்கு இத் தீய குணங்கள் காரணமாகையாலே. இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த ராமாநுஜ முநியை வணங்குகின்றேன். (௬)

7. அவதாரிகை:—கீழ் ச்லோகத்தில் இவர் ராகத்வே ஷாதிகள் அற்றவரெனக் கூறினர். இந்த ச்லோகத்தில் ராகத்வேஷங்களே, "இவர் நமக்கு நிலமன்று; நாம் இங்

இருக்க இயலாது" என்று இவரை விட்டுத் தாங்களே கைவாங்கின என்றும், இவர் அழகிய குணங்களுக்கு உறை விடமென்றும், உத்தம புருஷ லக்ஷணம் வாய்ந்தவரென்றும் கூறுகிறார்.

रामानुजमुनिं वन्दे रमणीय-गुणाकरम् ।
रागद्वेष-विनिर्मुक्तं राजीवदळ-लोचनम् ॥ ॥ ७ ॥

பதவுரை:—ரமணீயகுணாகரம் - அழகிய குணங்களுக்கு உற்பத்தி ஸ்தானமாயும், ராகத்வேஷ விநிர்முக்தம் - ராக த்வேஷங்களால் விடப்பெற்றவரும், ராஜீவதளலோசனம் - தாமரைப் பூவின் இதழ்போல் அழகிய நீண்ட கண்களை யுடையவருமான, ராமாநுஜ முநிம் - ராமாநுஜ யோகியை, வந்தே - வணங்குகிறேன்.

கருத்து:—இம் முனிவர் அழகிய நற்குணங்கள் உற்பவிக்கும் கனியாவார். ராகத்வேஷங்களால் விடப்பெற்றவர். அதாவது அவை இவரிடம் முன்பிருந்து இவருடைய முயற்சியால் அகற்றப்பட்டவையல்ல; அவைகளே இவரைக் கண்டு பயந்து ஒடுங்கி, "இவர் நமக்கு நிலமன்று" என்று இவரைவிட்டு நீங்கின. இத்தால் இவர் ராகத்வேஷங்களின் வாஸனையும் அற்றவர் எனக் கூறப்பட்டதாகும். தாமரை இதழ்போன்ற நீண்ட திருக்கண்களை யுடையவர் எனக் கூறியதால் இவரது மஹாபுருஷ லக்ஷணமும், அழகியவரதர் என்ற திருநாமத்துக்குக் காரணமான இவரது அழகும் கூறப்பட்டனவாகும். இத்தகைய ராமாநுஜமுநியை வணங்குகின்றேன். (எ)

8. அவதாரிகை:—கீழ் ச்லோகத்தில் இவரது தோஷமின்மையும் கல்யாணகுணங்களும் ஸௌந்தர்யமுமாகிய யவை கூறப்பட்டன. இதில் இவரது வைராக்யத்தின் பெருமை விஸ்தரிக்கப்படுகிறது.

उत्पत्तिं पवनात्मजे ऽलभत या वैराग्यसंपत्पुरा
शान्ते शान्तनवे निरन्तरं मगाद्वृद्धिं समृद्धां त्ततः।
सेयं संप्रति यं समेत्य भुवने विद्योतते नैकधा
तं रामानुज-योगिनं गुरुवरं पश्येम शश्वद्वयम्॥ ॥ ८ ॥

பதவுரை:—யா - எந்த, வைராக்ய ஸம்பத் - வைராக்ய மென்னும் ஐச்வர்யம், பவநாத்மஜே - வாயுவின் புத்திரனை அநுமானிடம், புரா - முற்காலத்தில், உத்பத்திம் - உற்பத்தியை, அலபத - அடைந்ததோ, தத: - அதன்பிறகு, (யா) எந்த வைராக்யமென்னும் ஐச்வர்யம், சாந்தே - அடக்கப்பட்ட மனதையுடைய, சாந்தநவே - சந்தநு மஹாராஜனின் புதல்வனை பீஷ்மரிடம், ஸம்ருத்தாம் - பூர்ணமான, ருத்திம் - ஸம்ருத்தியை, நிரந்தரம் - இடைவிடாது, நித்யமாக என்றபடி, அகாத் - அடைந்ததோ, ஸா - அப்படிப்பட்ட, இயம் - இந்த வைராக்யம் என்னும் ஐச்வர்யம், யம் - எந்த ராமானுஜ முநியை, ஸமேத்ய - அடைந்து, புவநே - உலகில், நைகதா - அநேகவிதமாக, வித்யோததே - ப்ரகாசிக்கின்றதோ, குருவரம் - ஆசார்யர்களுள் சிறந்தவரான, தம் - அந்த, ராமாநுஜயோகிநம் - இராமானுஜ முநியை, வயம் - நாம், சச்வத் - அடிக்கடி, பச்யேம-பார்க்க கடவோம், கண்டு களிக்கக்கடவோம் என்றவாறு.

கருத்து:—வைராக்யம் என்பது உலகில் மிகச் சிறந்த ஓர் ஐச்வர்யமாகும்; அது எல்லோருக்கும் கிடைத்தலரிது. அவ்வைச்வர்யம் முதலில் வாயுபுத்ரனாகிய அநுமானிடமே உண்டாயிற்று. அதன் பிறகு மனச் சாந்தி பெற்ற சந்தநு மஹாராஜனின் குமாரனாகிய பீஷ்மரிடம் நிரந்தரமாக மிக வ்ருத்தியைப் பெற்றது. இவ் விருவரையொழிந்த மற்றையோருக்கு இவ்வைச்வர்யம் இருந்ததில்லை என்பதை "அந்யத்ர பீஷ்மாத் காங்கேயா தந்யத்ரச

ஹநூமத: | ஹரிணீ குர மாத்ரேண சர்மணு மோஹிதம் ஜகத்'' என்ற வசனத்தால் அறிகிறோம். இந்த ச்லோகத்தின் கருத்து "கங்கா புத்திரனுன பீஷ்மனேயும் அநுமானே யும் தவிர்த்து மற்றைய உலகம் மானின் குளப்படி போன்ற ஸ்திரீகளின் அவயவ விசேஷத்தாலே மோஹ முற்றதே யாகும்'' என்பதாம். பீஷ்மரின் வைராக்யம் அநுமானது வைராக்யத்தைவிடச் சிறந்ததாகும். ஏனெனில், மிகுந்த வீர்யத்தையும் ஐச்வர்யத்தையும் உடையராய் எல்லா போக்யங்களேயும் அனுபவிக்கத் தகுதிவாய்ந்த அரசிளங் குமாரரல்லவா அவர்? அத்தகையவர் தமது பிதாவின் விருப்பத்தை உணர்ந்து மேலும் பிதா காமபோகங்களே அநுபவிக்க வேண்டியதற்காகவே தமது யௌவனப் பருவத்திலும் தமது போகத்தை சபத பூர்வமாகத் துறந்து உலகறியச்செய்து உயிருள்ளளவும் ப்ரும்ஹசர்யத்தையே அநுஷ்டித்துப் போந்த மஹா வைராக்யசாலியாயிற்றே அவர். மேலும் தமது ப்ராதாவான விசித்ரவீர்யன் நிமித்தமாக ஸ்வயம்வரத்தில் பலாத்காரத்தால் கொண்டு வரப்பட்ட காசி ராஜன் மகள் அம்பா என்பவள், தான் ஏற்கனவே ஸால்வராஜனே வரித்திருப்பதாயும் தனது மனம் அவனேயே விரும்புவதாகவும் சொல்ல, பீஷ்மரும் விசித்ர வீர்யனும் அவளே அவள் விருப்பப்படி செய்ய அநுமதித்தார்கள். ஆனல் அவள் ஸால்வனேச் சந்தித்து தன்னே மணக்கும்படி கேட்க "பீஷ்மரால் பலாத்கரித்து வீர்யத்தால் கொண்டு போகப்பட்ட உன்னே நான் விவாஹம் செய்து கொள்ள மாட்டேன்'' என்று திரஸ்கரித்துவிட்டான். பிறகு அவள் பீஷ்மரிடம் வந்து, "ஸால்வன் நிராகரித்துவிட்டபடியாலும் நீரே வீர்யத்தால் என்னேக் கொண்டுவந்தபடியாலும் நீராவது என்னே விவாகம் செய்துகொள்ள வேண்டும்; இல்லேயேல் தவம் செய்தாவது உமது உயிரை மாய்க்கும் உபாயத்தைக் கைக்கொள்வேன்'' என்று சபதம் பண்ணினவிடத்திலும் உயிரையும் மதியாது தாம் முன் பண்ணிய சபதத்

தின்படி ப்ரும்ஹசர்யத்தைப் பேணிப் போந்த மஹாநுபாவருமாவர் அவர். இப்படி அவ்விருவரிடமும் காணப்பட்ட வைராக்யம், இக் கலிகாலத்திலும் விரக்தர்களில் தலைவரான இவரிடம் காணப்படுவதால் மிகவும் ப்ரகாசிக்கிறது என்றார். காமக்ரோதாதி தோஷமே நிறைந்த இக் கலியிலும் ஒருவரிடம் அந்த வைராக்ய மிருந்ததால் அது அபிவ்ருத்தியை யடைந்து ப்ரகாசிக்கின்றது எனக் கூறப்பட்டது. அத்தகைய வைராக்யம் பூண்ட ராமாநுஜ முநிவரை அடிக்கடி காணக்கடவோம்; கண்டு களிப்பெய்தக் கடவோம் என ப்ரார்த்திக்கிறார். இக்காலத்தில் அத்தகைய வைராக்யம் வாய்ந்தவரை தர்சிப்பதும், அதிலும் அடிக்கடி தர்சிப்பதும் கிடைக்கக்கூடியவை யல்லவாகையால் அதை ப்ரார்த்திக்கிறார் மஹார்யர். (அ)

9. அவதாரிகை:—கீழ் ச்லோகத்தில் இவரது வைராக்யத்தின் பெருமை கூறப்பெற்றது. இதில் சிறந்த பண்டிதர்களாலும் மெச்சப்படும் இவரது க்ரந்த வ்யாக்யான சக்தியும் மிகவும் தூய்மையான ஆசாரமும் கூறப்படுகின்றன.

व्याख्या यस्य विदग्ध-सूरिपरिष-च्चित्तापहार-क्षमा
यद्दैनन्दिन-सत्क्रिया यतिवराद्याचार-सन्मातृकाः ।
तं रामानुज-योगिवर्य ममलं ज्ञानादि-पूर्णाशयं
वन्दे सौम्यवरेश-योगिचरण-द्वन्द्वारविन्दाश्रयम् ॥ ॥ ९ ॥

பதவுரை:—யஸ்ய - எந்த ராமாநுஜ முநிவருடைய, வ்யாக்யா - உபயவேதாந்த க்ரந்தங்களுக்கும் மந்த்ர மந்த்ரார்த்தங்களுக்கும் கூறப்படும் தெளிவுரை வ்யாக்யானம், (விதக்த...க்ஷமா) விதக்த - மிகவும் ஸமர்த்தர்களான, ஸூரிபரிஷத் - பண்டித கோஷ்டியின், சித்த - மனத்தை, அபஹார - கவர்வதில், க்ஷமா - தகுதி வாய்ந்ததாக ஆகிறதோ, (யத்...க்ரியா:) யத் - எவரது, தைநந்தின -

ப்ரதிதினம் அநுஷ்டிக்கப்படவேண்டிய, ஸத்க்ரியா-சிறந்த அநுஷ்டாநங்கள், (யதிவரா...மாத்ருகா:) யதிவராதி - எம்பெருமானார் முதலானாருடைய, ஆசார-அநுஷ்டானங்களை ஸந்மாத்ருகா:- ச்லாக்யமான மூலப்ரமாணமாகக் கொண்டனவாக, ப்வந்தி-ஆகின்றனவோ, (ஸௌம்ய...ஆச்ரயம்) ஸௌம்யவரேசயோகி - அழகிய மணவாள மாமுனிகளின், சரணத்வந்த - இரு திருவடிகளாகிற, அரவிந்த - தாமரை மலரை, ஆச்ரயம் - தமக்குப் பற்றாசாகக் கொண்டவரும், அமலம்-தோஷங்களற்றவரும், (ஞாநா...சயம்) ஞாநாதி - ஞாநம் பக்தி முதலியவற்றால், பூர்ண - நிறைந்த, (ஆசயம்) மனத்தை யுடையவருமான, தம் - அப்படி ப்ரஸித்தரான, ராமாநுஜயோகிவர்யம் - ராமானுஜ முநிவாரை, வந்தே - நமஸ்கரிக்கின்றேன்.

கருத்து:—ஸ்ரீ பாஷ்ய, பகவத்விஷய, மந்த்ரார்த்த ரஹஸ்ய க்ரந்தங்களுக்கு இம் முனிவர் அருளிச் செய்யும் தெளி பொருள் விளக்கம் (வ்யாக்யானம்), மிகவும் பாண்டித்யம் பெற்ற பண்டித ஸமூகங்களின் மனதையும் கொள்ளை கொள்ளும் தன்மை வாய்ந்தது. இது இந்த க்ரந்தகாரருக்கும் மற்றும் இவரைப்போன்ற மற்ற மஹா வித்வான்களான அஷ்டதிக்கஜங்களுக்கும் நேரே அநுபவ விஷயமாதலால் இவ்வாறு கூறினார். இவரது ஆசரணைகள், யதிகட்சிறைவனை ஸ்ரீ ராமானுஜமுநி முதலிய பெரியோர்களின் அநுஷ்டாநங்களைத் தமக்கு மூல ப்ரமாண (க்ரந்த) மாகக் கொண்டவை யாகும். மாத்ருகா என்பது முதலில் ஒருவரால் எழுதப்பட்ட (மூலபூதமான) முதலாவதான சுவடி; அதுவே பின்னர் பல சுவடிகளாக வெளிவருவதற்குக் காரணமா யிருப்பதால் அது அவ்வாறு மாத்ருகா எனக் கூறப்படும். அதுபோலவே முன்னர் எம்பெருமானார் முதலிய யதிகள் அனுஷ்டித்த அநுஷ்டானங்களே இவரது ஸத்கர்மாநுஷ்டாநங்களுக்கு மூலங்களாகும். எனவே இவர் பெரியோர்களின் அநுஷ்டானங்களில் எள்ளளவும் பிறழா

தவர். ஸ்ரீ மணவாள மாமுனிகளின் திருப்பாத மலர்களையே தமக்குப் பற்றுசாகக் கொண்டவர். எனவே தோஷங்களற்ற வர். ஞானம், பக்தி, விரக்தி என்னும் குணங்கள் நிறைந்த மனதையுடையவர். இப்படிப் பெருமை வாய்ந்து ப்ரஸித்தி பெற்ற ராமாநுஜ முனிவரை வணங்குகின்றேன். (௯)

10. அவதாரிகை:—கீழ் ச்லோகத்தில் எல்லா க்ரந்தங்களுக்கும் இவர் அருளிச் செய்யும் பொருள் விளக்கம் பண்டிதர்களின் மனதையும் கவரும் தன்மையது; அநுஷ்டானமும் பெரியோர்களின் அநுஷ்டாநங்களில் நின்றும் கொஞ்சமும் நழுவாதது என்றுர். இதில் இவரது தெளிபொருள் விளக்கத்தால் இவரது கோஷ்டியின் பக்கத்திலிருந்து இதைக் கேட்டுக் கொண்டிருக்கும் பக்ஷிகளும், "பரதத்வம் ஸ்ரீமந்நாராயணனே" என்று விளங்கச் சொல்லும் சக்திவாய்ந்தனவாகின்றன என்று தாம் ஆச்சர்யமுறுகிருர்.

यद्गोष्ठी-सविधस्थिताश्च शकुना स्तत्वं परं शाश्वतं
ज्योति र्वेदरहस्यसारपठितं नारायण श्श्रीपतिः ।
कि श्चान्ये चतुराननादि-विबुधा स्तच्छेषभूता इति
व्याकुर्वन्ति परस्परं यतिवरं रामानुजं तं भजे ॥ ॥ १० ॥

பதவுரை:—(யத்...ஸ்திதா:) யத் - எந்த ராமாநுஜ முனிவருடைய, கோஷ்டீ - காலக்ஷேப கோஷ்டியின், ஸவித - பக்கங்களிலே, ஸ்திதா:- இருக்கின்ற, சகுநா:ச- பக்ஷிகளும், பரம்ஜ்யோதி: - பரஞ்சோதியென்றும், பரம் தத்வம்-பரதத்வமென்றும், (வேத...படிதம்) வேதரஹஸ்ய- வேதங்களில் ரஹஸ்யங்களான உபநிஷத்துக்களின், ஸார - ஸாரமான நாராயணநுவாகத்தில், படிதம் - "நாராயண பரம்ப்ரஹ்ம" என்றும், "நாராயண பரோஜ்யோதி:" என்றும், "தத்வம் நாராயண: பர:" என்றும், "சாச்வதம் சிவமச்யுதம்" என்றும் படிக்கப்பட்ட பொருள்,

ஸ்ரீபதி:- லக்ஷ்மீ வல்லபனான, நாராயண:- நாராயணனே ஆவான், கிம்ச - மேலும், (சதுரா ...விபுதா:) சதுராநநாதி-பிரமன் முதலிய, விபுதா:- தேவர்கள், (தச்சேஷபூதா:) தத்-அந்த நாராயணனுக்கு, சேஷபூதா:- சரீரமாய்க்கொண்டு சேஷப்பட்டவர்கள், இதி - என்று, பரஸ்பரம் - ஒன்றுக்கொன்று, வ்யாகுர்வந்தி - வ்யாக்யானம் செய்கின்றனவோ, தம் - அப்படி ப்ரஸித்தரான, ராமாநுஜம் - ராமாநுஜ முனியை, பஜே - ஸேவிக்கிறேன்.

கருத்து:—இந்த ராமாநுஜ முனிவர் வைதிக வாக்யங்களில் "ஸதேவஸோம்ய இதமக்ர ஆஸீத்", "ஆத்மாவா இதமக்ர ஆஸீத்", "ப்ரம்ஹவா இதமக்ர ஆஸீத்" என்று ஸாதாரணங்களான "ஸத், ஆத்ம, ப்ருஹ்ம" சப்தங்களாலும் விசேஷமான நாராயண சப்தத்தாலும் ஜகத் காரணவஸ்துவை கூறிக், "காரணந்து த்யேய:" என்று அதையே உபாஸ்ய தத்வம் எனக் கூறுவதால், இவை வெவ்வேறு தத்வங்களா? அல்லது ஒன்றேயா? . என விசாரிக்கும்போது வேதங்களின் ஸாரங்களான உபநிஷத்துக்களிலும் ஸாரமாகக் கொள்ளப்படும் நாராயணநுவாகத்தில் "ஆத்ம, ப்ரஹ்ம, ஜ்யோதி" முதலான சப்தங்களை நாராயண பதத்தோடு ஸமாநவிபக்தி (வேற்றுமை) கமாய் "நாராயணபரம் ப்ருஹ்ம தத்வம் நாராயண: பர: | நாராயணபரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர:" இத்யாதி வாக்யங்களால் படிக்கப்பட்டிருப்பதால் ஸாமாந்ய விசேஷ ந்யாயத்தாலே ஜகத்துக்குக் காரணமான பரதத்வம் லக்ஷ்மீபதியாகிய நாராயணனே; மற்றய ப்ரும்ஹருத்ராதிகள் பரதத்வமன்று; அவர்கள் ஸ்ரீமந் நாராயணனிடமிருந்து உண்டானவர்கள், அவனுக்கு சரீரமாய்க் கொண்டு சேஷபூதர்கள் என்று உபநிஷத்து வாக்கியங்களை விளங்கக் கூறி பரதத்வ ஸ்தாபனம் செய்வது அவரது வழக்கமாதலால், அவரது கோஷ்டியின் பக்கங்களிலிருந்து கேட்டுக்கொண்டிருக்கும், ஞானத்திற்கு அடை

வில்லாத பக்ஷி ஜாதிகளும், அந்த வாக்கியங்களைச் சொல்லி பரதத்வ ஸ்தாபனம் பண்ணுகின்றன என்கிறார். இதனால் ஞானத்திற்கு இட்டுப் பிறவாத பக்ஷிகளும் நன்கு அறிந்து கொள்ளும்படி விஷயங்களைக் கற்பிக்கும் விஷயத்தில் இவருக்குள்ள ஆற்றல் நன்கு வெளியிடப்பட்டது. இங்கு "பரஸ்பரம் வ்யாகுர்வந்தி" எனக் கூறியதால் அப்பக்ஷிகளிலும் ஒருவர்க்கொருவர் ஞானத்தில் குறைந்தவர்கள் இல்லை; ஆயினும் "போதயந்த: பரஸ்பரம்" என்ற கணக்கிலே ஒன்றுக்கொன்று போதிக்கின்றன என்று கூறப்பட்டதாகும்.

ஸாமாந்ய விசேஷ ந்யாயமாவது "நிர்விசேஷம் நஸாமாந்யம்" என்கிறபடியே ஒரு ஸாமான்ய பதத்தை விசேஷ போதக சப்தத்தைக் கொண்டு விசேஷ விஷயமாக்கிப் பொருள்கொள்வது. "பசுநா யஜேத" என்று விதிவாக்யத்தில் நாற்கால் ஜந்துக்கள் எல்லாவற்றையும் கூறும் பசு சப்தத்திற்கு "ச்சாகஸ்ய வபாயா:" என்ற மந்த்ரத்தைக் கொண்டு அப்பசு என்பது "ஆடு" என நிர்த்தாரணம் செய்வதாகும்.

இவ்வாறு ஞானஹீநர்களையும் ஞாநவான்களாக்கும் ராமாநுஜ முனிவரை வணங்குகின்றேன். (கo.)

11 அவதாரிகை:—கீழ் ச்லோகத்தில் ஸமீபத்தில் இருக்கும் பக்ஷிகளுக்கும் வ்யாக்யானம் செய்யும்படி சக்தியை விளைவிக்கும் இவரது ஞானத்தின் பெருமை கூறப்பட்டது. இந்த ச்லோகத்தில் இவருடைய உபந்யாஸ கோஷ்டியில் சேரவும் வேண்டா; பக்கத்திலிருக்கவும் வேண்டா. இவரது கருணை அலை யெறியும் கடைக் கண்ணால் கடாக்ஷிக்கப்பெற்றவர்களே அர்த்த பஞ்சக ஞானம் பெற்றவருள் சிறந்தவர்களாவர் என்ற அதிசயத்தைக் கூறி, வானமாமலை எம்பெருமானுக்கு இவர் செய்த சாச்வதமான கைங்கர்யங்களாலும் இவர் அதிகம் பெருமைவாய்ந்தவர் என்று கூறுகிறார்.

यत्कारुण्य-सुधातरङ्ग-विलसन्नेत्रा-ञ्चलप्रेक्षिता
येकेचि त्तइमे ऽर्थपञ्चकविदा म्मुख्यास्तु सङ्ख्यावताम् ।
श्रीमद्व्योममहाचलस्य महितैः कैङ्कर्य-जातै र्ध्रुवै
र्भूया नाश्रितकल्पको विजयते रामानुजोय म्मुनिः॥ ॥११॥

பதவுரை:—யேகேசித் - எந்தச் சில மனிதர்கள், (யத்... ப்ரேக்ஷிதா:) யத் - எந்த முனிவரின், காருண்ய - கருணையாகிற, ஸுதா - அம்ருதத்தின், தரங்க - அலைகளாலே, விலஸத் - விளங்குகின்ற, நேத்ராஞ்சல - கண்ணின் கடையினாலே, ப்ரேக்ஷிதா: - பார்க்கப்பட்டனரோ, தே - அப்படி பாக்யம் பெற்ற, இமே - இம் மனிதர்கள், அர்த்த பஞ்சக விதாம்-ஐந்து அர்த்தங்களையும் நன்கறிந்த, ஸங்க்யாவதாம் - பண்டிதர்களுள், முக்யா: - தலை சிறந்தவர்கள் ஆகிறார்கள். ஸ்ரீமத்வ்யோம மஹாசலஸ்ய - ஸ்ரீ வானமாமலை எம்பெருமானுக்குச் செய்தவையும், மஹிதை:-கொண்டாடத்தக்கவையும், த்ருவை:-சாச்வதங்களுமான, கைங்கர்யஜாதை:-கைங்கர்யங்களின் ஸமூகத்தினால், பூயாந்-சிறப்பு வாய்ந்தவரும், ஆச்ரிதகல்பக: - தன்னை ஆச்ரயித்தவருக்கு கல்பகவ்ருக்ஷம் போல் அபேக்ஷிதங்களைக் கொடுக்குமவருமான, அயம்-இந்த, ராமாநுஜ: - ராமானுஜன் என்னும், முநி:-முனிவர், விஜயதே - மற்றெல்லோரிலும் சிறந்து விளங்குகின்றார்.

கருத்து:—அர்த்த பஞ்சகமாவது:- (1) ஸ்வஸ்வரூபம் எனப்படுவது, ஜீவாத்மாவின் ஸ்வரூபம், (2) பரஸ்வரூபம் எனப்படுவது, பரமாத்மாவின் ஸ்வரூபம், (3) புருஷார்த்த ஸ்வரூபமெனப்படுவது, முமுக்ஷுக்களின் விருப்பத்திற்கு விஷயமான மோக்ஷஸ்வரூபம், (4) உபாயஸ்வரூபமெனப்படுவது, அம்மோக்ஷத்தை அடைய சாஸ்த்ரங்களால் ஸாதனமாகக் கூறப்பட்டவை, (5) விரோதி ஸ்வரூபமெனப்படுவது, மோக்ஷத்தைப் பெற விரோதியாய் இடைமறித்து நிற்கின்ற அவித்யை, ருசி வாஸநா ப்ரக்ருதி ஸம்பந்தங்கள் முதலியனவாகும். இவ்வர்த்த பஞ்சகத்தையே ஸகல வேத

சாஸ்த்ர புராணங்களும் கூறுகின்றன. இவ்வர்த்த பஞ்சக ஞானமின்றி உஜ்ஜீவனமில்லை. இத்தகைய அர்த்த பஞ்சக ஞாநமும் வெகு க்லேசப்பட்டு சாஸ்த்ராப்யாஸங்களால் ஸாதிக்கப்படவேண்டி யிருக்க, இந்த ராமாநுஜ முனிவருடைய கருணை பூர்ணமான கடாக்ஷ லேசத்தினாலே உண்டாகிறது. நிற்க இவரது கருணை பூர்ணமான கடாக்ஷம் தனக்கு விஷயமானவர்களை அர்த்த பஞ்சகங்களை நன்குணர்ந்த பண்டிதர்களுள் ப்ரதாநர்களாகவும் ஆக்குகிறது என்று இவருடைய பெருமை கூறப்பட்டது. (தஇமேமுக்யா:) இங்கு தாம் நேரில் கண்டறிந்ததுடன் மற்றவருக்கும் ப்ரத்யக்ஷிக்கலாம் எனத் தோற்றும்படி "இமே" எனக் கூறுவதால், இதில் அர்த்தவாதமில்லை என்கிறார். மேலும் இந்த ஸ்வாமி ஸ்ரீ வானமாமலை எம்பெருமானுக்குச் செய்துள்ள பல சாச்வதமான கைங்கர்யங்களாலும் போற்றத் தக்கவர். தம்மை ஆச்ரயித்தவர்களுக்கு கல்பக வ்ருக்ஷம் போல் அபேக்ஷிதங்களை அளிக்கவல்ல பெரியவர். எனவே இந்த வானமாமலை ராமாநுஜ முனிவர் மற்றையோர்களில் சிறப்புடையராய் விளங்குகின்றார். (கக)

12. அவதாரிகை:—கீழ் ச்லோகத்தில் இம் முனிவரின் கடாக்ஷம் முக்தி ஸாதநமான அர்த்தபஞ்சக ஞானத்தை எல்லோருக்கும் அளிக்கவல்லதென்று பொதுவாகக் கூறியவர், இதில் மிகவும் தண்ணியனாய், அஹங்கார மமகாரங்கள் நிறைந்தவனான என்னை உஜ்ஜீவிப்பிக்க முயற்சிக்கும் பெரியோரிடத்திலும் விமுகனாய்த் திரிகின்ற மேட்டுமடையான என்னிடமும் இக் கருணை பாலிபாயா நின்றது என்கிறார்.

अस्थि-स्नायु-वसास्र-मांसनिचितेऽनित्ये विकारास्पदे
देहेऽस्मिन्ननहम्य हम्मतिकरे शब्दादि-सेवापरे ।
श्रीमद्वैष्णव-मत्परार्थ-विमुखे मय्यप्यकार्षीद्दयां
यस्तं व्योममहागिरेः परिपणं रामानुजं तं भजे ॥ ॥ १२ ॥

பதவுரை:—அஸ்தி - எலும்பு என்ன, ஸ்நாயு - சிறு நரம்புகள் என்ன, வஸா-வபை என்ன, அஸ்ர-ரக்தமென்ன, மாம்ஸ - மாம்ஸமென்ன, நிசிதே - இவைகள் செறிந்ததும், அநித்யே - அநித்யமானதும், விகாராஸ்பதே - பால்யம் யௌவனம், பருப்பது, இளைப்பது முதலிய வேறுபாடுகளுக்கு உறைவிடமாயும், அநஹமி - உண்மையில் அஹம் என்னும் பதத்திற்கு அர்த்தமல்லாததுமான, தேஹே - சரீரத்திலே, அஹம்மதிகரே - நானென்று அஹம்புத்தியைப் பண்ணு மவனும், (ஆதலால்) சப்தாதி ஸேவாபரே-சப்தாதி விஷயங் களில் ப்ராவண்யத்தால் அவைகளை அனுபவித்துப் போரு மவனும், (ஸ்ரீமத் விமுகே) ஸ்ரீமத் வைஷ்ணவ - பரமஸாத் விகர்களாய் பகவத் ஸம்பந்தத்திலே மூட்டும் அடியார்களி டத்திலும், மத்பர - ஆர்ய - என்னை உஜ்ஜீவிப்பதிலேயே நோக்குள்ள ஆசார்யர்களிடத்திலும், விமுகே - வைமுக் யத்தை யுடையனை, மயி அபி - என்னிடத்திலும், ய:- எந்த முனிவர், தயாம்-தயையை, அகார்ஷீத் - செய்தாரோ, வ்யோமமஹாகிரே: - வானமாமலை அப்பனுக்கு, பரிபணம்- மூலத்ரவ்யம், முதல் - போன்ற, தம் ராமாநுஜம் - அந்த ராமாநுஜ முனிவரை, பஜே - ஸேவிக்கின்றேன்.

கருத்து:—இந்த ச்லோகத்தின் மூன்று பாதங்களாலும் தமது தன்மையைக் கூறி, நான்காவதால். தம்மிடமும் இம் முனிவரது கருணை ஏறிப் பாய்ந்தது என்கிறார். அதாவது நான் எலும்பும் சிறிய நரம்புகளும் வபையும் ரத்தமும் மாம்ஸமுமாய்ச் செறிந்தும், அநித்யமாயும், அடிக்கடி பருப்பது இளைப்பது முதலிய வேறுபாட்டுக்கு உறை விடமாயும், அஹம் என்ற பதத்திற்கு அர்த்தமான ஆத்மா வல்லாததுமான சரீரத்தில் ஆத்மபுத்தியைப் பண்ணும் ப்ரமத்தையுடையவன். நிற்க இத்தகைய ப்ராந்தியால் இந் த்ரியங்களுக்கு எப்பொழுதும் இரை யிட்டுக்கொண்டு ஹேயமான சப்தாதி விஷயங்களைக் கொண்டே பொழுது போக்குமவன். ஸ்ரீவைஷ்ணவ ஸம்பத்து நித்யமாய்ச் செல்

லும் பரமபாகவதர்களைக் கண்டால் முகத்தை மாறவைத்துச் செல்லுமவன். அதிகம் சொல்லி என்? என்னை அங்கீகரித்து உஜ்ஜீவிப்பிக்க வேணுமென்று ப்ரயத்நம் செய்யும் ஆசார்யர்களைக் காணிலும் அவர்களைக் கண்ணெடுத்தும் ஸேவிக்கப் பெருத பாக்யஹீநனை தண்ணியன். இப்படிப்பட்ட என்னிடத்தும் இவர் தயையைச் செய்து என்னைத் திருத்தி ஆட்கொண்டவர். இவரை வானமாமலை எம்பெருமானது மூலதனம் (முதல்) எனக் கொள்ளவேண்டும். ஏனெனில்? மூலதனம் உடையவன் அந்த தநத்தைக் கொண்டு தொழில் வ்யாபாரம் முதலியவற்றைச் செய்து தனத்தைப் பெருக்கிக் கொள்ளுவது வழக்கமல்லவா? அதுபோலவே எம்பெருமானும் இவரை அவதரிப்பித்து அம்முனிவராகிற மூலத் தனத்தைக் கொண்டு அநேக ஜீவாத்மாக்களை நல்வழிப் படுத்தி அவர்களைப் பெறுகிருனுகையால், அவ்வீசனது (பரிபணம்) "மூலதனம்", இம் முனிவரர் என்று கூறக் குறையில்லை. இப்படிக் கூறியதால் "சேதந லாபம் ஈச்வரனுக்கு" எனப்படும் ஸாரதமமான ஸம்ப்ரதாயார்த்தம் வெளியிடப்பட்டதாகும். இப்படி ஈச்வரனுடைய லாபத்திற்கும் காரணமான இம் முனிவரை ஸேவிக்கின்றேன். (கஉ)

13. அவதாரிகை:—கீழ் ச்லோகத்தில் இம் முனிவரது கருணை தம்மிடமும் ஏறிப் பாய்ந்தது எனக் கூறினர். இதில் இம்முனிவரிடம் காணப்படும் சிறந்த கல்வி, விரக்தி, மற்றுமுள்ள ஸௌலப்ய ஸௌசீல்யாதிகள், பெரியோர் வகுத்த வழியைப் பேணிக் காக்கும் தன்மை, பகவத் விஷயத்திலுள்ள ப்ராவண்யம், இவைகளை விரித்துக் கூறுகிருர்.

विद्याकेलिगृहं विरक्तिलतिका-विश्रान्तिकल्पद्रुमं
प्रोन्मीलद्गुण-दिव्यरत्न-पटली-निक्षेपमञ्जूषिकाम् ।
श्रीमल्लक्ष्मण-योगिवर्य-पदवी-रक्षैकदीक्षा-गुरुं
श्रीमद्योम-महाचलेशनिरतं रामानुजार्यं श्रये ॥ ॥ १३ ॥

பதவுரை:—வித்யாகேளிக்ருஹம், வித்யைகளுக்கு (சாஸ்திரங்களுக்கு) விளையாடு மிடமானவரும், (விரக்தி ...த்ருமம்) விரக்தி-வைராக்யமாகிற, லதிகா-கொடிக்கு, விச்ராந்தி - விச்ராந்தியைக் கொடுக்கும், கல்பத்ருமம் - கல்பக வ்ருக்ஷமானவரும், (ப்ரோந்மீலத் குண...மஞ்ஜூஷிகாம்) ப்ரோந்மீலத் - நன்றாக ப்ரகாசிக்கிற, குண - கல்யாண குணங்களாகிற, திவ்யரத்ன - ச்லாக்யமான ரத்நங்களுடைய, படலீ - ஸமூஹத்திற்கு, நிக்ஷேப மஞ்ஜூஷிகாம்-வைத்துக் காப்பாற்றும் பெட்டியாயும், (ஸ்ரீமல் லக்ஷ்மண...குரும்) ஸ்ரீமல்லக்ஷ்மணயோகிவர்ய - ஸ்ரீராமாநுஜ முனிவரது, பதவீ - மார்க்கமாகிற விசிஷ்டாத்வைத ஸித்தாந்த மார்க்கத்தை, ரக்ஷைகதீக்ஷா - ரக்ஷிப்பதாகிற முக்ய தீக்ஷையில், குரும் - ஆசார்யனையும், (ஸ்ரீமத்...நிரதம்) ஸ்ரீமத்வான மஹாசலேச - லக்ஷ்மீவல்லபனை வானமாமலை எம்பெருமானிடத்து, நிரதம் - மிகுந்த அன்பு பூண்டவருமான, ராமாநுஜார்யம் - ராமாநுஜன் என்னும் ஆசார்யனை, ச்ரயே - ஆச்ரயிக்கின்றேன்.

கருத்து:—தன்னைப் பேணி ஆதரித்த முனிவரின் ப்ரபாவத்லதச் சுருங்கக் கூறுகின்றார் இதில். இந்த ராமாநுஜ முனிவர் "வித்யாஹ்யேதா: சதுர்தச" என்ற பதினான்கு வித்யைகளையும் கரை கண்டவராகையாலே, அவைகள் இவரிடம் களிநடம் புரிகின்றன என்கிறார். இவர் அவைகளுக்கு ரங்கஸ்தலம் (நடனமாடுமிடம்) போலும். மிகுந்த வைராக்ய முடையவராதலால் கொடி மரத்தை மூடப் படர்வதுபோல் இவரது வைராக்யமென்னும் கொடி தன்னிஷ்டப்படி மூடப் படர்ந்து விச்ராந்தியைப் பெற்று இளைப்பாறும் கற்பக வ்ருக்ஷம் போன்றவர் இவர். மேலும் ஆத்ம குணங்களாகிற சிறந்த ரத்நக் குவியலை வைத்துப் பூட்டிக் காப்பாற்றும் பேழை போன்றவர். இத்தால் இவர் எண்ணிறந்த குணங்களுக்கு உறைவிடமென்பது கூறப்பட்டது. எம்பெருமானாராலே ஸ்தாபிக்கப்பட்ட விசிஷ்

டாத்வைத ஸித்தாந்தத்தை ரக்ஷிக்கையாகிற முக்ய தீக்ஷை யில் ஆசார்யனாய் வழிகாட்டுமவர் இவர். இப்படி இந்த தர்சனத்திற்கு வழிகாட்டியா யிருப்பது மாத்திரமன்றி அவ்வழியே ஒழுகி எப்பொழுதும் வானமாமலை தெய்வ நாயகனிடம் நிரதிசய ப்ரீதிரூபாபந்நமான பக்திபூண்டவரு மாவர். இத்தகைய குணக் கடலான ராமாநுஜ முனிவ ரெனப்படும் எனது ஆசார்யனை ஸேவிக்கின்றேன். (௧௩)

14. அவதாரிகை :—வாநமஹாத்திரி ராமாநுஜயோகி மங்களாசாஸமென்னும் ப்ரபந்தத்தின் கடைசியான இந்த ச்லோகத்தில் வாநாசல ராமாநுஜ முனிவரின் பெருமைகள் கீழ்க் கூறியவை எல்லாம் திரட்டிக் கூறப்படுகின்றன.

कान्तोपयन्तृ-मुनिवर्य-दयानिवासं
वैराग्य-मुख्य-महनीय-गुणाम्बुराशिम् ।
श्रीदेवनायक-पदप्रणय-प्रवीणं
रामानुजं यतिपतिं प्रणमामि नित्यम् ॥ ॥ १४ ॥

பதவுரை:—(காந்தோ...நிவாஸம்) காந்தோபயந்த்ரு முநி வர்ய - அழகிய மணவாள மாமுனிகளின், தயா-கருணைக்கு, நிவாஸம் - உறைவிடமாயும், (வைராக்ய...ராசிம்) வைராக்ய முக்ய - வைராக்யம் முதலிய, மஹநீய-கொண்டாடத் தகுந்த, குண - குணங்கட்கு, அம்புராசிம் - கடலாயும், (ஸ்ரீதேவ... ப்ரவீணம்) ஸ்ரீதேவநாயக - வானமாமலை ஸ்ரீ தெய்வநாயக னுடைய, பத - திருவடிகளில், ப்ரணய - ப்ரீதிசெய்யும் விஷ யத்தில், ப்ரவீணம் - சிறந்தவரும், யதிபதிம் - யதித்தலைவரு மாகிய, ராமாநுஜம் - ராமாநுஜ முனிவரை, நித்யம் - எப் பொழுதும், ப்ரணமாமி - நன்கு வணங்குகின்றேன்.

கருத்து:—இந்த ச்லோகத்தின் முதல் பாதத்தால் ஸ்ரீமத் வரவரமுநிகளின் கருணைக்கு வாஸஸ்தானமென்று இவரது பெருமையை யறிவித்தார். அவ்வாசார்யனுடைய கடாக்ஷத் தால் இவர் வைராக்யம் முதலிய நற்குணங்கள் ஒருங்கு

சேரும் குணக்கடலாயினர் என்றார்; இரண்டாம் பாதத்தால். கடலாக ரூபித்ததால் வைராக்யாதி குணங்கள் ஒரு நாளும் இவரிடம் குறைந்து காட்டியதில்லை என்பது தேறும். மூன்றாமடியால் இவ்வாத்ம குணங்களடியாக உண்டாகும் ஸர்வேச்வரன் விஷயமான இவரது நிரதிசய ப்ரீதியை நிரூபித்தார். நான்காமடியால் கீழ்க் கூறியபடி மாமுனிகளின் கருணைக்குப் பாத்திரமாய் அதடியாக உண்டாகிய வைராக்யாதி குணங்களையுடையராய், அதடியாக உண்டாகிய பகவத் ப்ரேமத்தை யுடையராகையாலே யதிகட்கிறைவராஞர் என்று இவரது ப்ரபாவங்களைப் பணித்து, இத்தகைய பெருமைவாய்ந்த வானமஹாத்ரி யோகியாகிய ராமானுஜ முனியை ப்ரதி தினம் வணங்குகின்றேன் எனக் கூறி மங்களா சாஸநத்தை முடிக்கிறார். இங்கு "ப்ரணமாமி" என்றவர்த்தமானத்தால் தமது அதிகார மாந்த்யத்தைப் பார்த்துத் தான் கலங்கியபோதெல்லாம் ஆசார்யன் திருவடிகளை இவர் வணங்குகின்றார் என்று தேறுகிறது. "ப்ர" என்ற உபஸர்க்கத்தால் வணக்கத்தில் மனோவாக்காயம் என்ற கரணங்களின் பூர்த்தி கூறப்பட்டது. நித்யம் என்பது ப்ரதிதினமும் என்பதாகும். இந்த க்ரந்தம் மங்களாசாஸநம் என்ற பெயரால் வழங்கப்பட்டு வருகிறதே; இதில் "ஸ்வஸ்தி - பத்ரம்-மங்களம்" என்பவை போன்ற பதங்கள் காணப்படவில்லையே யென்று சிலர் ஐயமுறலாம். எனினும் "நம:- ஜிதம்தே, தோற்றோம், போற்றி, பல்லாண்டு" என்னும் இவை பர்யாயம் என்ற பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தியை நன்கு உற்று அநுஸந்திக்குமவர்கள் இந்த நூல் மங்களா - சாஸநரூபந்தான் என்று எளிதில் உணரலாகும். இக்ரந்தத்திலும் இம்முனிவரது குணங்கட்கு தோற்று, வந்தே, நமோஸ்து, நௌமி, விஜயதே என்ற ஸ்வரூபவாசியான பதங்களை மஹார்யர் ப்ரயோகித்திருப்பதும் காணத்தக்கது.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வாநாசலமுநயே நம:

ஸ்ரீ தொட்டை அய்யங்கார் அப்பை எனப்படும்
மஹார்யர் அருளிய

ஸ்ரீ வானமஹாசலயோகி

ப்ரபத்தி

தமிழ் உரையுடன்

அவதாரிகை:—ஸ்ரீமத் வானமாமலை ராமாநுஜ முனிவரின் அஷ்ட திக்கஜங்களில் ஒருவராகிய தொட்டையங்கார் அப்பை எனப்படும் மஹார்யர், தமது ஆசார்யராகிய ராமாநுஜ முனிவரது கல்யாண குணங்களிலும் விக்ரஹ ஸௌந்தர்யத்திலும் ஆழ்ந்தார். அவர் பூர்வாச்ரமத்தில் அழகிய வரதரிறே; எனவே முந்துற மங்களாசாஸநத்தில் இழிந்தார். தற்பொழுது தாம் ஸ்வாமியின் கடாக்ஷ விஷயீகாரத்தைப் பெற அவர் திருவடிகளிலே சரணம் புகுகிறார், இப்ரபந்தத்தில்,

सद्यः-प्रबुद्ध-सरसीरुह-तुल्य-शोभौ
संपश्यतां नयनयो मुद मादधानौ ।
संसार-सागर-समुद्धरण-प्रवीणौ
वानाद्रि-योगिचरणौ शरणं प्रपद्ये ॥ ॥ १ ।

பதவுரை :—(ஸத்ய:ப்ர...சோபௌ) ஸத்ய: - அப்பொழுதே, ப்ரபுத்த - நன்ருக மலர்ந்த, ஸரஸீருஹ - தாமரைப்பூவோடு, துல்ய - ஒப்பான, சோபௌ - காந்தியையுடையதுகளும், ஸம்பச்யதாம் - நன்ருய் ஸேவிப்பவர்களுடைய, நயநயோ: - கண்களுக்கு, முதம் - சந்தோஷத்தை, ஆததானௌ - உண்டுபண்ணுமவைகளாயும், (ஸம்ஸார...ப்ரவீணௌ) ஸம்ஸார - ஸம்ஸாரமாகிற, ஸாகர - ஸமுத்ரத்திலிருந்து, ஸமுத்தரண - கரையேற்றுவதில், ப்ரவீணௌ - மிக சாமர்த்யம் வாய்ந்தவைகளுமான, வாநாத்ரியோகி சரணௌ - வானமாமலை ராமாநுஜ முனிவரின் திருவடிகளை, சரணம் - உபாயமாக, ப்ரபத்யே - பற்றுகிறேன்.

கருத்து:—வாநாத்ரி ராமாநுஜ முனிவரின் திருவடிகளைப் பற்றும் மஹார்யர் அதன் பெருமைகளை விளக்குகிருர் மூன்று பாதங்களாலே. முதல் பாதத்தில் அப்பொழுதே முழுதும் அலர்ந்த செவ்வித் தாமரை மலர்களோடொத்த சோபையை உடையன அத்திருவடிகள் என்ருர். இதனுல் ம்ருதுத் தன்மை, ஸௌகந்தம், குளிர்த்தி இவைகளையுடையது அத்திருவடிகள் என்று அதன் போக்யதை உணர்த்தப்பட்டது. இரண்டாம் பாதத்தில் அத்திருவடிகளை நன்கு ஸேவிக்குமவர்களின் கண்களுக்குக் களிப்பூட்டுமவை அவை யென்ருர். இதனுல் அவற்றின் அழகு கூறப்பட்டதாகும். மூன்ருவது பாதத்தில் அவை ஸம்ஸாரமென்னும் ஸமுத்ரத்தில் ஆழ்ந்து கிடக்கும் ஸம்ஸாரிகளை அவற்றில் நின்றும் கரையேற்றுவதில் மிகுந்த ஸாமர்த்யம் பெற்றவை என்ருர். இத்தால் மென்மை, குளிர்த்தி, நாற்றம், அழகுபோன்ற குணங்களை யுடையனவாய் இம்மையில் போக்யதையால் களிப்பூட்டுவது மாத்திரமின்றி மறுமையிலும் மோக்ஷத்தையும் அளிக்கும் பெருமைவாய்ந்தவை அவை யெனக் கூறி, அவைகளைத் தமக்கு உபாயமாகப் பற்றுகிறேன் என்ருர். இங்குக் கூறப்பட்ட பற்றுதல் மாநஸமே யாயினும் அமையும் கார்யகரமாகைக்கு. (௧)

2. அவதாரிகை:—முன் ச்லோகத்தில் ராமாநுஜ முனிவரது ஸம்ஸாரோத்தாரகத்வம் கூறப்பட்டது. இந்த ச்லோகத்தில் அதற்குக் காரணமாகிய காமக்ரோதாதி துஷ்ட குணங்களில்லாமை, சற்குணங்களுக்கு உறைவிடமாயிருத்தல் முதலிய பெருமையையும், ஸ்ரீ மணவாள மாமுனிவரின் இன்னருளால் அப்பெருமையை இவர் பெற்றமையையும் கூறி, இத்தகைய ப்ரபாவம் வாய்ந்த ராமாநுஜ முனிவரின் திருவடிகள், தம்மை ஆச்ரயித்தவர்களுக்குக் கல்பக வ்ருக்ஷம் போன்றவை எனக் கூறி அவைகளைச் சரணம் புகுகிறார்.

कान्तोपयन्तृ-मुनिवर्य-दयात्त-भूम्नः
कामादिनिग्रहकरस्य गुणाम्बुराशेः ।
वानाद्रि-लक्ष्मणमुने र्नतलोक-कल्प-
वृक्षायमाण-चरणौ शरणं प्रपद्ये ॥ ॥ २ ॥

பதவுரை:—காந்தோபயந்த்ருமுனிவர்ய - அழகிய மணவாள மாமுனிவரின், தயா - கருணையினால், ஆத்த - பெறப்பட்ட, பூம்ந: - பெருமையை யுடையவரும், (காமாதிநிக்ரஹகரஸ்ய) காமாதி - காமம் க்ரோதம் முதலியவற்றை, நிக்ரஹகரஸ்ய - அடக்குமவரும், குணாம்புராசே: - சற்குணங்களுக்குக் கடல்போன்றவருமான, வாநாத்ரி லக்ஷ்மண முநே: - வானமாமலை ராமாநுஜ முனிவரது, (நத...சரணௌ) நதலோக - தன்னை வணங்கிய ஜனங்களுக்கு, கல்பவ்ருக்ஷாயமாண - கற்பக வ்ருக்ஷம்போல் ஆசரிக்கின்ற, சரணௌ - திருவடிகளை, சரணம் - உபாயமாக, ப்ரபத்யே - பற்றுகிறேன்.

கருத்து:—இந்த ச்லோகத்தின் முதலடியில் இம்முனிவர் ஸ்ரீ மணவாள மாமுனிகளின் கருணைக்குப் பாத்திரமாய் அதனால் பெற்ற அதிசயத்தை உடையவர் என்றார். இரண்டாமடியில் காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம்,

மாத்ஸர்யம் என்று கூறப்படும் ஸஹஜ சத்ருக்களையும் அடக்குமவரென்றும், சற்குணங்கள் நிறைந்த கடல் போன்றவர் என்வும் கூறினர். இங்கு காமாதிகள் சாரா வண்ணம் துறத்துமவர் என பொதுவாகக் கூறியதனல் தம்மை ஆச்ரயித்த பிறருடைய காமாதிகளையும் துறத்தும் ஆற்றல் வாய்ந்தவர் எனக் கூறப்பட்டதாகும். சற்குணங்களுக்குக் கடலென்றதனல் ஒருநாளும் வற்ருத சற்குண ஸம்பந்நர் இவர் என்றதாயிற்று. இனி ச்லோகத்தின் பிற்பகுதியால் இப்படிப் பெருமைவாய்ந்த வாநாசல ராமாநுஜ முனிவ்ரது, தன்னை ஆச்ரயித்தவர்களுக்குக் கற்பகவ்ருக்ஷம் போன்றதான திருவடிகளை ச் சரணம் புகுகிறர். இதில் "நத லோக" "தம்மை வணங்கியஜனங்களுக்கு" எனப் பொதுவாகக் கூறியதால் தம்மை வணங்கியவரின் பெருமை சிறுமைகளைப் பார்த்துக் கொடுக்கும் புன்மை திருவடிகளுக்கில்லாமை கூறப்பட்டதாகும். கற்பக வ்ருக்ஷமென அவைகளைக் கூறியதால் நினைத்த மாத்திரத்திலே இம்மை மறுமைப் பயன்களை அர்த்தித்தார் அர்த்தித்தபடியே கொடுக்கும் பெருமையும் கூறப்பட்டதாகும். (உ)

3. அவதாரிகை:—இம்முனிவர் மாமுனிகளின் கருணைக்குப் பாத்திரமாய், அதனல் இவர் பெற்ற மிகச் சிறந்த வைராக்ய குணத்தை விரித்துக் கூறுகிறர், இந்த ச்லோகத்தில்.

दारात्मजादि-जनितं सुख मैहिकं यः
कारागृह-प्रभव-दुःखसमं विचार्य ।
सौम्योपयन्तृ-मुनिपादयुगं श्रित स्त-
द्वानाद्रि-योगिचरणौ शरणं प्रपद्ये ॥ ॥ ३ ॥

3. பதவுரை:—(தாராஜ...நிதம்)-தாராத்மஜாதி-பெண்டிர் மக்கள் முதலியோரால், ஜநிதம்-உண்டுபண்ணப்பெற்ற

தும், ஐஹிகம் - இம்மையில் அநுபவிக்க வேண்டுமதான, ஸுகம் - சுகத்தை, ய:-எந்த ராமாநுஜ முனிவர் (காரா... ஸமம்) காராக்ருஹ - சிறைக் கூடத்தில், ப்ரபவ - உண்டாகிய, து:கஸமம்-துக்கத்தோடு ஒத்ததாக, விசார்ய-நிர்ணயம் செய்து, (ஸௌம்யோ...யுகம்) ஸௌம்யோ பயந்த்ருமுநி-அழகிய மணவாள முனிவரின், பாதயுகம்-இரு பாதங்களையும், ச்ரித: - ஆச்ரயித்தனரோ, தத்வாநாத்ரியோகி சரணௌ - அந்த வாநாசல ராமாநுஜ முனிவரது திருவடிகளை, சரணம் - உபாயமாக, ப்ரபத்யே - பற்றுகிறேன்.

கருத்து :—" இவ்வுலகில் மற்றையோர் ஸுகங்களென ப்ரமித்துக் களிக்கும், மனைவி மக்கள் முதலியோரால் உண்டாகக்கூடிய ஸுகங்கள் சிறைக்கூடத்திலனுபவிக்கும் துன்பத்தோ டொப்பானவை" என இம்முனிவர் தீர்மானித்து, மாமுனிகளின் திருவடிகளைச் சரணம் புக்கார் என்கிறார். அது எவ்வாறு எனில்? சிறைக் கூடமென்பது ஒருவன் செய்த தீச்செயலுக்குத் தக்கவாறு அரசனால் சிக்ஷை விதிக்கப்பெற்று அடைத்து வைத்திருக்கு மிடமாகும். அதுபோலவே ஸம்ஸாரமும் சிறைக்கூடமே யென்னத் தட்டில்லை. எப்படி எனில் அவ்வவ ஜீவன் முன்பிறவிகளில் செய்த கன்ம பலங்களை யநுபவிக்க வேண்டியே ஈச்வரனால் ஸம்ஸாரத்தில் பிறக்கும்படி செய்யப்படுவதால் அதுவும் சிறைக்கூடமே. ஸம்ஸாரத்திலும் சிலர் நெடுநாள் சுகவான்களாயும் ஆரோக்யாதிகளை யுடையராயும் ஸ்வதந்த்ரர்களாயும் காணப்படவில்லையா? எனவே எவ்வாறு இது சிறையாகுமெனில், நன்கு ஆராய்ந்தால் அதன் உண்மை புலனாகும். நாம் ஸம்ஸாரத்தில் சிறிது சுகம் பெற்றாலும் அது அற்பமும் அஸ்திரமுமாகையாலும், அதுவே மேலும் பல பிறகளாகிய சிறைகளுக்குக் காரணமாவதாலும், அது மேலெழப் பார்ப்பவர்களுக்கு ஸுகமாகத் தோன்றினாலும் உண்மையில் துக்கமேயாகும். எனவேதான் நிரூபணத்தில் இழிந்த ஆழ்வார்கள் "பெண்டிரால் சுகங்களுய்ப்பான்

பெரியதோரி டும்பை பூண்டு'' என்றும், ''ஒரு நாயகமாய் ஓட உலகுடனாண்டவர்...பெருநாடு காண இம்மையிலே பிச்சை தாம் கொள்வர்'' என்றும் ஸம்ஸார ஸுகம் துக்கமென்பதையும், ஐச்வர்யம் அஸ்திரமாகையால் துக்காஸ்பதமென்பதையும் கூறியுள்ளனர். சிறைக்கூடத்திலும் அரசன் உதாரனா யிருந்தால் சிறிது ஸுகமெய்தலா மல்லவா? அது போலவேதான் ஸம்ஸார ஸுகமும் என்னத் தட்டில்லை. இப்படித் தீர்மானித்த இம்முனிவர் செய்தது என் என்னில்? சாச்வதமான சுகத்தைப் பெற அழகிய மணவாளமுனிவரின் திருவடியைச் சரணமாகப் பற்றினர். அதுபோலவே யானும் மாமுனியைச் சரணம் புக்க, இம்முனிவரது திருவடிகளிலே எனது தலையை மடுக்கிறேன் என்கிறர். (௩)

4. அவதாரிகை :—கீழ் ச்லோகத்தில் ஸம்ஸாரத்தில் இவருக்கு உண்டாகிய விரக்தி கூறப்பட்டதல்லவா? இந்த ச்லோகத்தில் அந்த விரக்தி என்னும் குணமானது கிளைத்துத் தழைத்துப் படர்ந்ததும், இம்முனிவரிடமே எனக் கூறப்படுகிறது.

आदौ हनूमति विरक्तिलता प्रसूता
पश्चा त्कुरुप्रवर मेत्य विवृद्धि माप्ता ।
शाखा-सहस्ररुचिरा यमुपेत्य तादृ-
ग्वानाद्रि योगिचरणौ शरणं प्रपद्ये ॥ ॥ ४ ॥

பதவுரை :—ஆதௌ - முதலிலே, ஹநூமதி - ஆஞ்சநேயரிடத்தில், ப்ரஸூதா - உண்டானதும், பச்சாத் - பிறகு, குருப்ரவரம் - குருவம்சத்தில் பிறந்தவருள் சிறந்தவரான பீஷ்மரை, ஏத்ய - அடைந்து, விவ்ருத்திம் - மிகுந்த வ்ருத்தியை, ஆப்தா - அடைந்ததுமான, விரக்திலதா - விரக்தியென்னும்கொடியானது, யம்-எந்த ராமாநுஜ முனிவரை, உபேத்ய - கிட்டியடைந்து, (சாகா...ருசிரா) சாகா

ஸஹஸ்ர - ஆயிரக்கணக்கான அநேகம் கிளைகளால், ருசிரா-மனதைக் கவர்வதாக இருக்கிறதோ, (தாத்ருக்...சரணௌ) தாத்ருக் - அப்படிப்பட்ட, வாநாத்ரியோகி - வானகிரிமுனிவரின், சரணௌ - திருவடிகளை, சரணம் - உபாயமாக, ப்ரபத்யே - பற்றுகிறேன்.

கருத்து:—விரக்தி என்பது செவி, வாய், கண், மூக்கு உடலெனப்படும் இந்திரியங்களுக்கு விஷயங்களாகிய, சப்த ரஸ ரூப கந்த ஸ்பர்சங்களில், அவ்விந்த்ரியங்கள் புகாமல் காத்தலே யாகும். இந்த விரக்தியை ஓர் கொடியாக நிரூபணம் செய்கிறார் மஹரார்யர். ஒரு கொடி முதலில் விரையிலிருந்து உண்டாகிக் கொள் கொம்பில் படர்ந்து பின் பெரிய மரத்தைச் சார்ந்து பூர்ணமாகப் படர்வதுபோல், இந்த விரக்திக் கொடியும் இம் முநிவரைப் பற்றி அநேகக் கிளைகளுடன் பூர்ணமாகப் படர்ந்து இலங்குகின்றது என்கிறார். இக்கொடி முன்பு த்ரேதா யுகத்தில் அநுமானிடம் முளைத்தது; பின்னர் குருவம்சத் தரசனாகிய பீஷ்மரிடம் விருத்தியை யடைந்தது. இக்கலியுகத்தில் இந்த ராமானுஜ முனியிடம் நன்கு படர்ந்து அநேகம் கிளைகளோடு கூடியதாய் கண்டவர் மனதையும் ஆகர்ஷிக்குமதாய் இருக்கிறது என்கிறார். அனுமானையுங் காட்டில் பீஷ்மரிடம் வைராக்யம் அதிகம் என்பது, தமது உயிரையும் த்ருணமாக மதித்து அவர் ப்ரும்ஹசர்யத்தைப் போற்றி வந்ததாலாகு மென்பது கீழ் மங்களாசாஸந உரையில் விரிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. அந்த பீஷ்மரைக்காட்டிலும் ஸ்வாமி ராமாநுஜ முனிவரிடம் அந்த வைராக்யம் அதிகம் என்பது எவ்வாறு என்னில்? காம க்ரோதாதிகளே நிறைந்த இக்கலி காலத்திலும் காமப் பயனைப் பெறுவிக்கும் க்ரஹஸ்தாச்ரமத்தை பீஷ்மர் தமது தந்தையின் சுகாநுபவத்துக்காகத் துறந்தது போலல்லாமல், "இல்லறம் தமது ஆசார்யாநுவர்த்தன கைங்கர்யாதிகளுக்கு விரோதி" என்று ஒரு நிர்ப்பந்தமுமின்றி தாமே அதைத் துறந்து விரக்தியை ஏற்றுக்கொண்டதாலாகும். இங்கு "சாகா

ஸஹஸ்ரருசிரா'' என்று பல கிளைகளாய்க் கிளைத்ததாலும் இங்கு அது பூர்ணம். அதாவது இவரது விரக்தியின் பெருமையைக் கண்டு க்ரஹஸ்தர்களான இவரது சிஷ்யர்களும் மிகுந்த வைராக்ய சாலிகளானுர்கள் என்பது வரமங்கைமுனி வைபவத்தில் காணலாம். ஸ்வாமியின் ஞானபுத்ரனை ராமானுஜம் பிள்ளான் மிகுந்த வைராக்ய முள்ளவராதலால் ஒரு நாள் அவருடைய பத்னீ ஸர்வபூஷண லங்க்ருதையாய் எதிரில் நிற்க, "நீ எனக்கு ப்ரதிகூலையாகா நின்ருய்; பதிவ்ரதைக்குச் சீலமன்ருே பூஷணம். இந்த பூஷணங்களால் ஆவது என்?'' என்று க்ஷேபிக்க, அவளும் நடுநடுங்கி தனது ஆபரணங்களை யெல்லாம் களைந்து பர்த்தாவிடம் கொடுத்தாள். அவரும் எல்லாவற்றையும் வாங்கி உருக்கி வானமாமலை தெய்வ நாயகப் பெருமாளுக்குத் திருமார்பு லக்ஷ்மியாய் ஏறியருளப் பண்ணி, தமது ஸ்வாமியின் அநுமதியின் பேரில் ப்ரதிஷ்டிப்பித்து ச் சாத்தியருளினுர்'' என்றதனுல் பல சிஷ்யர்கள் இவரது வைராக்யத்தையே கடைப்பிடித்தனர் என்பதற்குத் தக்க சான்ருகுமல்லவா? ஆதலால் அநேகங் கிளைகளுடன் படர்ந்தது எனக் கூறினர். நிற்க அந்த வானமாமலை ராமாநுஜ முனிவரிடம் அக்காலத்தில் ஸந்யாஸம் பெற்ற வைராக்யசாலிகள் சிலரும், பிறகு நாளதுவரையில் அந்தப் பட்டத்தை அலங்கரித்து வரும் ஸ்வாமிகள் பலரும் வைராக்யபூர்ணராய் ஸந்யஸித்து அவரது கைங்கர்யங்களை அநுஷ்டித்து வருவது அவர் மூலமே யாகையாலும் அவ் வைராக்யம் அவரை யாச்ரயித்துப் பல கிளைகளுடன் படர்ந்தது என்னக் குறையில்லை. இத்தகைய வைராக்யம் வாய்ந்த முனிவரின் திருவடிகளைச் சரணமாகப் பற்றுகிறேன் என்கிருர். (௪)

5. அவதாரிகை:- இந்த ச்லோகத்தில், முன் கூறப்பட்ட சிறந்த வைராக்யஸ்ரீ மாத்திரமின்றி பகவத் கைங்கர்ய ஸ்ரீயும் இம்முனிவரிடம் குடிகொண்டது என்கிருர்,

वानाचलस्य वरम डपगोपुरादि-
कैङ्कर्य मारचितवान् फणिनाथव द्यः ।
प्रीत्यै परं वरवरस्य यतीशितु स्त
द्वानाद्रि-योगिचरणौ शरणं प्रपद्ये ॥ ॥ ५ ॥

பதவுரை:—யதீசிது: - யதிகட்கு இறைவனுகிய, வரவரஸ்ய ஸ்ரீவரவரமுனிவரது, ப்ரீத்யை பரம்-ப்ரீதியை உத்தேசித்தே, ய: - எந்த வானாசல முனிவர், பணிநாதவத் - ஆதிசேஷனைப்போலே, வாநாசலஸ்ய - வானமாமலையான எம்பெருமானுக்கு, (வரமண்....கர்யம்) வரமண்டப - சிறந்த மண்டபங்களென்ன, கோபுர - கோபுரங்களென்ன, ஆதி- இவை முதலியவற்றின், கைங்கர்யம் - திருப்பணியை, ஆரசிதவான் - செய்தனரோ, (தத்...சரணௌ) தத் - அந்த, வாநாத்ரியோகி - வாநாசலமுனிவரின், சரணௌ-திருவடிகளை, சரணம் - உபாயமாக, ப்ரபத்யே - பற்றுகிறேன்.

கருத்து:—இதில் இம்முனிவர் யதிகட்கிறையாகிய ஸ்ரீ மணவாள மாமுனிகளின் திருவுள்ளத்தைப் பின் சென்று அவரது ப்ரீதிக்காகவே "வானமாமலையே அடியேன் தொழவந்தருளே" என்ற ஆழ்வார் பாசுரப்படியே வானமாமலையாய எம்பெருமானுக்குச் சிறந்த மண்டபங்கள், கோபுரங்க்ள், ஆதி சப்தத்தால் ப்ராகார வாஹநாதிகள் என்ற பலவற்றையும் உண்டாக்கி, பரமபதநாதனுக்கு அங்குப் பரமபதத்தில் சேஷன் என்று கூறப்படும் ஆதிசேஷன் "சென்றால் குடையாம்" என்கிற பாசுரப்படி அநேக கைங்கர்யங்களையும் செய்யுமாபோலே, இவரும் இங்கு அநேகம் கைங்கர்யங்களைச் செய்துள்ளார் என்று இவருடைய அநந்தாவதாரத்வத்தை ஸூசிப்பிக்கிறார். இங்கு "ப்ரீத்யை பரம் வரவரஸ்ய" எனக் கூறியதால் இவர் இந்த கைங்கர்யங்களுக்காக மாமுனிகளைப் பிரிய மனமில்லாவிட்டாலும் அவருடைய உகப்புக்காக வானமாமலை யப்பனின் கைங்கர்

யத்தை ஏற்றுக்கொண்டார் எனத் தெரிகிறது. இங்ஙனன்று கில் "ஆசாரியனைப் பிரிந்திருப்பாரார் மஹாமே பேசு... தேசாந்தரத்திலிருக்க மனந்தான் பொருந்தமாட்டாது" என்று உபதேசரத்னமாக உபதேசித்த மாமுனிகளின் அடிச் சுவட்டைப் பின்பற்றும் பாதரேகா ஸமரான இவர் அவரை விட்டிருக்கவும் வல்லரோ? "வரம்" என்று பாட மானபோது சிறந்த என்று பொருளாய் கைங்கர்ய பதார்த் தத்தில் அந்வயித்து சிறந்த கைங்கர்யத்தை எனக் கொள்ளத்தகும்; இப்பொழுது தூராந்வயமாகும். இங்கு உபமானமாகக் கூறப்பட்ட ஆதிசேஷனுக்கும் இவ ருக்கும் வாசியுண்டு. அவர் நித்யஸூரிகளில் தலைவ ராகையாலே தமது ஸங்கல்ப மாத்திரத்தினாலேயே தமது திருமேனியைக் குடை, சிங்காஸநம் முதலிய உபகர ணங்களாக அமைத்துக்கொண்டு அசேஷ சேஷவ்ருத்தியை யும் எம்பெருமானுடைய அவ்வவ நிலைகளுக்கு அநுகுண மாகச் செய்யும் ஆற்றல் வாய்ந்தவர் ஆவார். நமது ஸ்வா மியோ மநுஷ்யாவதாரத்திற்குச் சேர மெய்வருந்திப் பொரு ளீட்டி அநேக பரிச்ரமங்களோடு நெடு நாட்களில் செய்ய வேண்டி யிருந்தபடியால் அவர் கைங்கர்யங்களிலும் இவர் திருப்பணிகளே மேலானவை என்னத் தட்டில்லை. ஆயினும் அவரைப்போல் எல்லாக் கைங்கர்யங்களையும் செய்ததற்கு மாத்திரமே அவர் உபமானமாவார். இத்தகைய கைங்கர்ய நிஷ்டையையுடைய கைங்கர்ய லக்ஷ்மீ ஸம்பந்நரான வான் கிரி முனிவரைச் சரணம் புகுகிறேன் என்கிறார். (5)

6. அவதாரிகை:—இம்முனிவர் ஸ்ரீ மணவாளமாமுனி களின் திருவுள்ளக் கருத்துப்படி கைங்கர்யங்களைச் செய் ததுமன்றி, பாஷாந்தரமான த்ராவிட பாஷையாகப் பரிண மத்தை அடைந்து நம்மாழ்வார் திருமுகத்திலிருந்து வெளி வந்த திருவாய்மொழி முதலிய த்ராவிட வேதங்களின் அர்த்தங்களை அறிய விருப்பங்கொண்ட ஸாத்விகர்களுக் கும், அவற்றைத் தமது ஔதார்யத்தால் உதவிய மஹோப

காரகர், ஞான பரிபூர்ணர் என்று இதில் கொண்டாடுகிறார்.

भाषान्तरेण परिणामवदागमानां
यश्श्रीशठारिवचसां श्रवणामृतानाम् ।
अर्थानुपादिश दुदारतर स्सतां त
द्वानाद्रि-योगिचरणौ शरणं प्रपद्ये ॥ ॥ ६ ॥

பதவுரை:—பாஷாந்தரேண - வேறு பாஷையான த்ராவிட பாஷையாக, பரிணவதாகமாநாம் - மாறுபாட்டையடைந்த வேதங்களாயும், ச்ரவணாம்ருதாநாம் - காதுகளுக்கு அமுதம் போன்றவைகளுமான, ஸ்ரீ சடாரிவசஸாம் - ஸ்ரீ சடகோபனின் திருவாக்குக்களான திருவாய்மொழி முதலியவற்றின், அர்த்தாந்-சிறந்த அர்த்தங்களை, உதாரதர:-மிக உதாரரான, ய:-எந்த முனிவர், ஸதாம் - ஸாத்விகர்களுக்கு, உபாதிசத்-உபதேசித்தனரோ, (தத்...சரணௌ) தத் - அப்படிப்பட்ட, வாநாத்ரியோகி-வானகிரி முனிவரது, சரணௌ - திருவடிகளை, சரணம் - உபாயமாக, ப்ரபத்யே - பற்றுகிறேன்.

6. கருத்து:—வேத வேத்யனை பரம புருஷன் ஜீவராசிகளை உஜ்ஜீவிப்பிக்க விரும்பி, தனது பெருமையைச் சிறிதும் பாராது தன்னை அழியமாறி மானிட சாதியிலும் மற்றும் திர்யக் ஸ்தாவர ஜாதிகளிலும் அவதரித்தது போலவே, அவனை ப்ரதிபாதிக்கின்ற வேதமும், சிலருக்கே அதிகாரமுடையதாகையாலும், அதன் அர்த்தங்களும் அநேக சாஸ்த்ரஞானாபேக்ஷமாய் க்லேசப்பட்டே அறியவேண்டும்படி யிருக்கையாலும், தன்னால் உலகைத் திருத்த இயலவில்லையே என்று வருந்தி, வ்யாஸ பராசராதிகள் பக்கலில் "வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மனா" என்கிறபடியே இதிஹாஸ புராணாதிகளாக அவதரித்தாப்போலே, ஸம்ஸ்க்ருத பாஷையை யறியாதாரும் உஜ்ஜீவிக்கவேணு மென்ற க்ருபாதிசயத்தாலே, த்ரா

விட வேதமாகவும் பரிணமத்தையடைந்தது. இப்படி மாறு பாட்டுடன் உதித்தவை ஸ்ரீசடகோபன் அருளிச்செய்த திருவாய்மொழி முதலியனவாம். இது மற்றய ஆழ்வார்களின் ப்ரபந்தங்களுக்கும் உபலக்ஷணமாகும். அவையும் நாதமுனிகளுக்காக ஸ்ரீ சடகோபன் முகமாக வெளிவந்தவையே. இவற்றை "ச்ரவணாம்ருதாநாம்" எனக் கூறியது "செவிக்கினிய செஞ்சொல்லே" என்றதை அடியொற்றியபடி. அம்ருதம் எனக் கூறியதால், இப்ரபந்தங்களே "உள்ளத்தை மாசறுத்து", "இருவினைப் பாசங்கள் நீக்கி", "வீடும் தரும்" என்ற விஷயம் ஸூசிப்பிக்கப் பெற்றது. இப்படிப்பட்ட அர்த்த விசேஷங்களை ஸத்துக்களுக்கு உபதேசித்த உதாரர் இம்முனிவர். இங்கு ஸத்துக்களாகிறார் "ஸந்தமேநம் ததோ விது:" என்று கூறப்பட்ட வேதாந்த ஞானமுடைய பேரியோர்கள். அப்படிப்பட்ட பெரியோர்களுக்கும் இப்ரபந்தார்த்தங்களி லுண்டாகக்கூடிய ஸம்சய விபர்யங்களைத் தமது உபதேசத்தால் அறவே நீக்கும் சிறந்த ஞானி இவர் எனக் கூறப்பட்டதாகும். இங்கு உதார: என்னுதே "உதாரதர:" எனக் கூறியதால், பாசுரங்கள் அருளிச்செய்த ஆழ்வாருடையதும் அதற்குப் பாஷ்யமாக ஈடு முதலிய வ்யாக்யானங்களை அருளிச்செய்த ஆசார்யர்களுடையதுமான, ஔதார்யங்களைக் காட்டிலும், அந்த ஈடு முதலிய வ்யாக்யானங்களில் துரூஹங்களுமான அர்த்தங்கள் தெளிவு பெறும்படி அருளிச்செய்யும் ஆற்றல்வாய்ந்த ஆசார்யர்கள் இல்லாதிருந்த காலத்திலே இவர் எல்லாருக்கு முபதேசிக்கையாலே இவர் சிறந்த ஔதார்யமுடையவர் எனக் கூறினர். இப்படிப்பட்ட அதிகாரி துர்லபமாயிருந்தபடியால்தான் திருவாய்மொழிப் பிள்ளை மாமுனிகளைப் பகவத் விஷயத்தையே பேணிப் போரும்படி நியமித்ததும். ஆகையால் "உதாரதர:" என்னத் தட்டில்லை. இங்ஙனன்றியே தமது பீடத்தை உண்டாக்கித் தமது பரம்பரையிலே இன்றளவும் அலங்கரிக்கும் முனிவர்களை யாவரையும் ஸாதுக்களுக்கு

உபதேசிக்கும்படி நித்யமாய் நியமித்த ஔதார்ய விசேஷத்தாலே "உதாரதர:" எனக் கூறினர் எனவும் கொள்ளலாம். ஆக இவ்வாறு உதாரரான வானமாமலை முனிவரின் சரணங்களைச் சரணடைகின்றேன். (கூ)

7. **அவதாரிகை**:—கீழில் இம்முனிவரின் ஔதார்யம் பரக்கப் பேசப்பட்டது. இந்த ச்லோகத்தில், இவருடைய "ராமானுஜன்" என்னும் திருநாமம் விஷத்தைப் போக்கும் மந்த்ரம் போலே ஸம்ஸாரமாகிற ஸர்ப்பத்தின் விஷத்தைப் போக்கவல்லது என்றும், தன்னை உச்சரிப்பவர்களுக்கு பரமபுருஷனோடு பரமஸாம்யத்தையும் (முக்தியை) தரவல்லது என்றும் திருநாமத்தின் பெருமையைக் கூறி, இவர் திருவடிகளில் சரணம் புகுகிறார்.

यन्नामकीर्तन मनुक्षण माहु रार्या
स्संसारभोगि-विषनिर्हरणाय मन्त्रम् ।
पुंसां परेण पुरुषेण च साम्यदं त
द्वानाद्रि-योगिचरणौ शरणं प्रपद्ये ॥ ॥ ७ ॥

பதவுரை:—ஆர்யா: - பெரியோர், அநுக்ஷணம் - க்ஷணந்தோறும் செய்யப்படும், (யந்நாமகீர்த்தனம்) யத்- எந்த முனிவரது, நாமகீர்த்தனம் - திருநாம ஸங்கீர்த்தனத்தை, (ஸம்ஸார... ஹரணாய) ஸம்ஸார-ஸம்ஸாரமாகிற, போகி - ஸர்பத்தினுடைய, விஷ - விஷத்தை, நிர்ஹரணாய - போக்குவதன் பொருட்டாகிய, மந்த்ரம்-மந்த்ரமாக, ஆஹு:- சொல்லுகிறார்களோ, பும்ஸாம் - புருஷர்களுக்கு, பரேண - பராத்பரனுன, புருஷேண ச - புருஷனோடும், ஸாம்யதம் - ஸாம்யத்தை கொடுக்கவற்றோ, (தத்வாநாத்ரி யோகி சரணௌ), தத்-அப்படிப்பட்ட, வாநாத்ரியோகி-வானகிரிமுனிவரின், சரணௌ-திருவடிகளை, சரணம் - உபாயமாக, ப்ரபத்யே-பற்றுகிறேன்.

கருத்து:—இம்முனிவரது ராமானுஜன் என்னும் திருநாமம் ப்ரதி க்ஷணமும் கீர்த்தனம் செய்யப்படுமானால் அது

ஒரு மந்த்ரத்தின் கார்யத்தைச் செய்ய வல்லது. அடிக்கடி ஜபித்து அதன் ஸித்திக்கு உறுப்பாகச்செய்ய வேண்டிய எண்ணிக்கையோடு கூடி ஸித்தியைத் தரும் கருட மந்த்ர மானது, ஸ்மரணமாத்ரத்தாலே எப்படி ஸர்ப்பாதி துஷ்ட ஜந்துக்களின் விஷத்தை நீக்குமோ அதுபோலவே அநவரதம் சிந்திக்கப்படும் இந்த ராமாநுஜன் என்னும் இவர் திருநாமம், ஸம்ஸாரமாகிற ஸர்ப்பத்தின் விஷத்தைப் போக்கும். அது மாத்திரமேயன்றி பரம புருஷனை ஸ்ரீ மந்நாராயணனோடு ஸாம்யத்தையும் அளிக்கும் என்று பெரியோர்கள் கூறு கிறார்கள். இங்கு ஸம்ஸாரத்தை ஸர்ப்பமாகக் கூறியதால் பாம்புபோலவே ஸம்ஸாரமும் வக்ர கதியை உடையது என் றும், அப்பாம்பால் தீண்டப்பட்டவன் மூர்ச்சையுறுவது போலவே இந்த ஸம்ஸார ஸ்பர்சம் பெற்றவனும் உண் மையை உணராது மயங்குகிறான் என்றும் அதை நீக்கும் கருட மந்த்ரம்போல் ஸம்ஸார ஸ்பர்சத்தால் வந்த மயக் கத்தை நீக்கி உண்மை உணர்வை அளிப்பது, அடிக்கடி உச் சரிக்கப்படும் இந்த முனிவரது திருநாமமேயாகையால் அதை மந்த்ரமாகக் கூறுவர் ஞானவான்களான பெரியோர். “மந் த்ாரம் த்ராயத இதி மந்த்ர:” என்ற வ்யுத்பத்திப்படி தன்னை அநுஸந்திப்பவனை காப்பாற்றுவது மந்தரம்அல்லவா? நிற்க இத்திருநாமம் நான்கே அக்ஷரமுள்ளதாயினும் திருவஷ்டா க்ஷரம்போலவே பரமபுருஷனாகிய ஸ்ரீ மந்நாராயணனோடு “பரமம் ஸாம்யமுபைதி” என வேதத்தால் கூறப்படும் பரம ஸாம்யத்தையும் தரவல்லது. “நமோ நாராயணேதி மந்த்ரோ பாஸக:, வைகுண்டபுவநம் கமிஷ்யதீதி” என்ற ப்ரமாணத் தின்படியே அஷ்டாக்ஷர மஹா மந்த்ரம் ஸ்ரீவைகுண்டத்தைக் கொடுத்து முஞ்ஷ்டகத்தாலே பரமனோடு பரமஸாம்யத்தை யும் கொடுப்பதுபோலவே இத்திருநாமமும் என்று பணிப்பர் பெரியோர். பும்ஸாம் என்றதனால் அதிகாரிநியதி இல்லை என் றபடி. அப்படிப் பெருமைவாய்ந்த திருநாமத்தை யுடையவ ரான வானுத்ரி முனிவரின் திருவடிகளைச் சரணம் புகுகிறேன்

8. அவதாரிகை :—கீழ் ச்லோகங்களில் ஞான வைராக்யாதிகளாலும் திருநாம ப்ரபாவத்தாலும் வந்த இம்முனிவரது பெருமையைக் கூறி, திருவடிகளில் சரணம் புக்கார். இனிமேல் நான்கு ச்லோகங்களில் ஸாக்ஷாத்தாகத் திருவடிகளின் ப்ரபாவத்தையே கூறி, அவற்றைச் சரணம் புகுகிறார். அதிலும் இந்த முதல் ச்லோகத்தில் ஸ்வாமியின் திருவடிகள் கேவல ஸ்மரணத்தாலே ஜந்மாந்தரத்தில் உண்டான பாப ஸமூஹத்தையும் நசிப்பிக்கும் பெருமை வாய்ந்ததெனக் கூறிச் சரணம் புகுகிறார்.

पुंसां पुरातनभवार्जित-पापराशि
स्स्मृत्या ययो स्सकृदपि प्रलयं प्रयाति ।
सद्वन्दितौ परमपावनतैकवेषौ
वानाद्रि-योगिचरणौ शरणं प्रपद्ये ॥ ॥ ८ ॥

பதவுரை :—பும்ஸாம் - மனிதர்களுடைய, (புராதன - பவார்ஜித பாபராசி:) புராதந-பழைமையான, பவ-ஜந்மங்களில், ஆர்ஜித-ஸம்பாதிக்கப்பட்ட, பாபராசி:, பாபங்களின் திரளானது, யயோ: - எந்தத் திருவடிகளினுடைய, ஸக்ருத்-ஏகவாரமே செய்யப்படும், ஸ்ம்ருத்யா அபி-அநுஸந்தானத்தாலும், ப்ரளயம்-நாசத்தை, ப்ரயாதி-அடைகிறதோ, ஸத்வந்திதௌ-பெரியோர்களால் நமஸ்கரிக்கப் பெற்றதும், (பரம...வேஷௌ) பரம-மிகச் சிறந்த, பாவநதா-பரிசுத்தத் தன்மையையே, ஏகவேஷௌ-முக்கிய ஸ்வரூபமாயுடையதுமான, வாநாத்ரியோகி சரணௌ-வாநாத்ரி முனிவரின் திருவடிகளை, சரணம்-உபாயமாக, ப்ரபத்யே - பற்றுகிறேன்.

கருத்து:—இம்முனிவரின் திருவடிகள் புராதனமான அநேக ஜந்மங்களில் ஸம்பாதித்து மனிதர்களால் கூடு பூரிக்கப்பட்ட பாபஸமூஹங்களையும் ஒருக்கால் ஸ்மரித்த மாத்திரத்திலேயே நசிக்கும்படி செய்கின்றது என்கிறார். "மனத்

தினால் சிந்திக்கப் போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்'' என்று ஆண்டாளருளிச் செய்ததை இவர் தமக்கு வகுத்த விஷயத்திலே யாக்கியருளுகிறார். பும்ஸாம் என்றது ஸ்த்ரீகளுக்கும் உபலக்ஷணம். ஆசார்ய சரணாரவிந்த சிந்தனத்தில் ஸ்த்ரீகளுக்கு அதிகாரமில்லாமை யில்லை யிறே. ''பும்ஸாம்'' எனக் கூறியதால் வர்ணாச்ரமாதி அதிகார நியதியில்லாமை கூறப்பட்டது. இது ''ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே'' என்ற உபநிஷத் வாக்யத்தை நினைப்பூட்டுகிறது. மேலும் இத்திருவடிகள் ''ஸந்தமேநம் ததோ விது:'' என்று கூறப்படும் ப்ரும்ஹ ஞானிகளான அப்பாச்சியாரண்ணா, ராமானுஜம்பிள்ளான் போன்றவர்களால் வணங்கப் படுமவை, மிகுந்த புனிதத் தன்மையையே தமக்கு ஸ்வரூபமாகக் கொண்டவை. இத்தால் நித்யஸித்தமான அபஹதபாப்மத்வாதி கல்யாணகுணங்களை யுடையவனே தன்னை ஆச்ரயித்தவனுக்கு அக்குணாஷ்டக ப்ராதுர்பாவத்தைச் செய்விக்கச் சக்தனுமாப் போலே இத்திருவடிகள் ஸ்மரித்தவர்களின் பாபங்களையும் போக்குவிக்கும் சக்திவாய்ந்தவையாயின என்று முற்கூறியதற்குக் காரணமும் இத்தால் ஸூசிப்பிக்கப்பட்டதாகும். ''பரமபாவந தைகவாஸௌ'' என்று பாடங் கொண்டால் ''புனிதத் தன்மைக்கு முக்கியமான உறைவிடம்'' என்பதாகும். தாத்பர்யத்தில் அதிக பேதமில்லை. இத்தகைய திருவடிகளைச் சரணம் புகுகிறேன். (அ)

9. அவதாரிகை :—இந்த ச்லோகத்தில் இத்திருவடிகள் தான் வேண்டுமோ? இவைகளின் ஸம்பந்தம் பெற்ற ஸ்ரீபாத தீர்த்தமே தாபத்ரயமாகிற அக்னியை அணைக்கவல்லது; இவைகளின் சம்பந்தம் பெற்று உதிரும் திருவடித் துகளும், உள்ளே உண்டாகும் ரஜோகுணங்களையும் சமநம் செய்யு மவையல்லவா ? இத்தகைய பெருமை வாய்ந்த இம்முனிவரின் திருவடிகளில் சரணம் புகுகின்றேன் என்கிறார்.

यत्तीर्थवारि-कलिकाल-समीरणोत्थ-
तापत्रयाग्निशमनं विमलं जनानाम् ।
यद्रेणु रान्तररजः प्रशमाय त-
द्वानाद्रि योगिचरणौ शरणं प्रपद्ये ॥ ॥ ९ ॥

9. பதவுரை :—யத்தீர்த்தவாரி - எந்தத் திருவடிகளில் நின்றும் க்ருஹிக்கப்பட்ட ஸ்ரீபாததீர்த்தம், விமலம் - பரிசுத்தமானதாய்க் கொண்டு, (கலிகால...சமநம்) கலிகால - கலியுகமாகிற, ஸமீரண - காற்றினுலே, உத்த - வ்ருத்தியடைந்த, தாபத்ரய - ஆத்யாத்மிக ஆதிபௌதிக ஆதிதைவிகங்களென்னும் தாபங்கள் மூன்ருகிற, அக்நி-நெருப்பை, சமநம் - அணைக்கத்தகுந்ததோ, யத்ரேணு: - எந்தத் திருவடிகளின் ஸம்பந்தம் பெற்ற ஸ்ரீபாததூளி, (ஆந்தரரஜ: - ப்ரசமாய) ஆந்தர - மனதில் உண்டாகும், ரஜ: - ரஜோகுணத்தை, ப்ரசமாய ச - நீக்குவதன்பொருட்டு ஆகிறதோ, தத்வாநாத்ரியோகிசரணௌ - இத்தகைய சக்திவாய்ந்த வானகிரி முனிவரது இத்திருவடிகளை, சரணம்-உபாயமாக, ப்ரபத்யே - பற்றுகிறேன்.

கருத்து:—கல்மஷ மற்று பரிசுத்தமான, இம்முனிவரின் திருவடிகளின் ஸம்பந்தம் பெற்ற ஸ்ரீபாததீர்த்தம் கலியுகமாகிய காற்றின் ஸஹாயத்திஞல் அபிவ்ருத்தி யடையும், ஆத்யாத்மிகம் ஆதிபௌதிகம் ஆதிதைவிகம் என்னும் அக்நியை அணைக்கும் சக்திவாய்ந்தது. ஆத்யாத்மிகமென்பது சரீரத்திலுண்டாகும் நோய்களாலான துன்பங்களும் நாசமும். ஆதிபௌதிகமென்பது கரடி புலி காளை முதலியவற்ருல் ஏற்படும் துன்பம் நாசம் முதலியன. ஆதிதைவிகமென்பது இடி மின்னல் முதலியவற்ருல் தெய்வீகமாய் ஏற்படும் துக்கங்களும் நாசங்களுமாகும். இவைகளை அக்நியாக நிரூபணம் செய்ததால் அக்நி தனக்கு ஆதாரமான விறகுகளேயும் அழிப்பது போல் இதுவும் ஆச்ரயத்தை அழித்தே தீருமென்

பதைத் தெரிவிக்கிறது. கலிகாலத்தை வாயுவாகக் கூறியதால் அக்நிக்கு அநுகூலமாய் அதை வ்ருத்தி செய்விக்கும் வாயு போல் கலிகாலம் அந்தத் தாபத்ரயங்களுக்கும் அநுகூலமாய் அவற்றை வ்ருத்தி செய்கிறது என்ற அம்சம் கூறப்பட்டதாகும். தாபத்ரயத்தை அக்நியாய்க் கூறியதால் இது சீக்கிரம் பரவும் ஸ்வபாவமுடையது என்றும் தாமதித்தால் அணைக்கக் கூடாதவை எனவும் தோற்றுகிறது. எனவே அத்தகைய தீயை யணைக்கும் தன்மை வாய்ந்தது இந்த முனிவரின் ஸ்ரீபாத தீர்த்தம். இப்படி ப்ரபாவம் வாய்ந்த ஸ்ரீபாத தீர்த்தம் இன்றளவும் நாம் பெறும்படி யிருப்பதும் நமது பாக்யவசமேயாகும். நிற்க இத்திருவடிகளின் துகளும் மனிதனின் உள்ளத்து உண்டாகும் ரஜோ குணத்தைப் போக்கும் தன்மை பெற்றதாயிருக்கிறது. ஒரு ரஜஸ்ஸு மற்றொரு ரஜஸ்ஸைப் போக்குகிறபடி என்னே? இப்படிப் பெருமைவாய்ந்த இத்திருவடிகளைச் சரண் புகுகின்றேன். (௯)

10. அவதாரிகை :—கீழ் திருவடிகளின் ஸ்மரண ப்ரபாவமும் தீர்த்த ப்ரபாவமும் ரஜ: ப்ரபாவமும் கூறப்பட்டன. இந்த ச்லோகத்தில் பெரியோர்களும் இந்தத் திருவடிகளில் வந்து ஆச்ரயிப்பதால் வந்த பெருமையைப் பேசி அவற்றைச் சரண் புகுகிறார்.

> **वाधूल-वंश-तिलको वरदार्यवर्यो**
> **वात्सल्यसिन्धु रखिलात्मगुणोपपन्नः ।**
> **निक्षिप्तवान् निजभरं निखिलं ययो स्त-**
> **द्वानाद्रि-योगिचरणौ शरणं प्रपद्ये ॥ ॥ १० ॥**

பதவுரை :—வாதூல வம்ச திலக: - வாதூல குலத்திற்கு அலங்காரமான திலகம் போன்றவரும், வாத்ஸல்ய ஸிந்து: - வாத்ஸல்யமென்னும் குணத்திற்கு கடல் போன்றவரும், (அகில...உபபந்ந :) அகில ஆத்மகுண - சமதமாதிகளான எல்லா ஆத்மகுணங்களாலும், உபபந்ந: - நிறைந்தவ

ராயுமிருக்கிற, வரதார்யவர்ய :-வரதாசார்யர் என்று திரு நாமமுள்ள அப்பாச்சியாரண்ணு என்பவர், யயோ:-எந்தத் திருவடிகளில், நிகிலம்-எல்லாவிதமான, நிஜபரம்-தம்முடைய பாரத்தை, நிக்ஷிப்தவான்-வைத்தனரோ, தத்வாநாத்ரியோ:கிசரணௌ-அந்த வானமாமலை முனிவரின் திருவடிகளை, சரணம்-உபாயமாக, ப்ரபத்யே-பற்றுகிறேன்.

கருத்து :—கந்தாடைத் திருவம்சத்திற்குத் திலகம் போன்றவரும், கோயிலண்ணனின் சிறிய தகப்பனார் குமாரரும், திருமஞ்சனம் அப்பா என்பவருக்கு தௌஹித்ரருமாய், ஆய்ச்சியின் குமாரருமாய், வாத்ஸல்யமென்னும் குணத்திற்குக் கடல்போன்றவரும் சமதமாதி அநந்தாத்ம குண பரிபூர்ணருமான அப்பாச்சியாரண்ணு என்று வழங்கும் திருநாமமுடையவருமான வரதாசார்யர் என்பவர், இம்முனிவரது திருவடிகளையே பற்றி அவைகளிலே தமது பரத்தை எல்லாம் ஸமர்ப்பித்து ந்யஸ்த பரராயிருந்தார். அதாவது ஆகிஞ்சந்யம் அநந்யகதித்வம் இவைகளை முன்னிட்டு இந்த ராமாநுஜ முனிவரின் திருவடிகளையே உபாயமாகப் பற்றிப் பின்பு ஸ்வரக்ஷணத்தில் அந்வயமின்றி ஓடத்தில் ஏறியவன், தன்னைக் காப்பாற்றும் பொறுப்பை ஓடக்காரனிடம் விட்டுவிட்டுக் கரைசேரும் காலத்தையே சிந்தித்துக் கொண்டிருப்பதுபோல் இத்திருவடிகளிலே தமது பொறுப்பை ஒப்புவித்தபடியால், "கூவிக்கொள்ளும் காலம் இன்னம் குறுகாதோ" எனச் சிந்தித்திருந்தார். ஆசார்யனும் ஸம்ஸார ஸாகரத்தைக் கடத்தி அப்புறப்படுத்து மவனாகையால் ஓடக்காரனாகவே கொள்ளப்படலாம். எனவே சிறந்த குடிப் பிறப்பும் ஆத்ம குணமும் நிறைந்த பெரியோரும் தமது பாரத்தை ஒப்படைக்கும் பெருமையையுடையரான வாநகிரி முனிவரின் திருவடிகளைச் சரணம் புகுகிறேன்.

11. அவதாரிகை :—இந்த ச்லோகத்தில், போரேற்று நாயனார் என்று சொல்லப்படும் ஸமரபுங்கவாசாரியர் என்ற மற்றொரு பெரியோரால் அர்ச்சிக்கப்பட்டது இம்முனி வரின் திருவடி என்று அதன் பெருமையைக் கூறி, அத் திருவடிகளையே சரணம் புகுகிறார்.

सद्वृत्तसम्भवभुवा शमदान्ति-सीम्ना
सद्वन्दितेन निगमाञ्चल-सार-भूम्ना ।
संपूजितौ समरपुङ्गव-देशिकेन
वानाद्रि-योगिचरणौ शरणं प्रपद्ये ॥ ॥ ११ ॥

பதவுரை :—(ஸத் . புவா) ஸத்வ்ருத்த - சிறந்த ஸதாசாரங்களுக்கு, ஸம்பவபுவா - உத்பத்தி ஸ்தானமாயும், (சமதாந்திஸீம்நா) சம - மன அடக்கத்திற்கும், தாந்தி - மற்றைய இந்த்ரியங்களின் அடக்கத்திற்கும், ஸீம்நா - எல்லை நிலமாயும், ஸத்வந்திதேந - ஸாதுக்களால் வணங்கப்பெற்றவரும், (நிகம... பூம்நா) நிகமாஞ்சல-வேதாந்தங்களின், ஸார-ஸாரார்த்தங்களால், (அறிந்தமையால்-வந்த) பூம்நா - பெருமையை யுடையவருமாயிருக்கிற, ஸமரபுங்கவதேசிகேந - ஸமரபுங்கவர் என்னும் ஆசார்யனாலே, ஸம்பூஜிதௌ - நன்கு பூஜிக்கப்பட்ட, வாநாத்ரியோகி சரணௌ - வாநாசல முநிவரின் திருவடிகளை, சரணம் - உபாயமாக, ப்ரபத்யே - பற்றுகிறேன்.

கருத்து :—போரேற்று நாயனார் எனப்படும் ஸமர புங்கவாசார்யர், சிஷ்டர்களின் மிகச் சிறந்த ஆசாரங்களுக்கு விளையும் பூமி எனப் போற்றப்படுமவர். மனதை அடக்கி யாளுகையாகிற "சம"மென்னும் குணத்திற்கும், மற்றைய கண் முதலிய வெளி இந்த்ரியங்களை அடக்கி யாளுகையாகிற "தமம்" எனப்படும் குணத்திற்கும் எல்லை நிலமென்று மெச்சப்படுமவர்; ஞானிகளான ஸாதுக்களும் வணங்கும்

பெருமை வாய்ந்தவர். "வேதாந்த வாக்யங்களின் ஸாரார்த்தங்களையும் நன்கு உணர்ந்தவர்" என்னும் அதிசயம் வாய்க்கப் பெற்றவர். இத்தகைய பெருமை வாய்ந்த இந்த ஸமர புங்கவராலும் இம்முனிவரது திருவடிகள் நன்கு பூஜிக்கப் பெற்றன என்றால் இதனில் மிக்க பெருமையும் உண்டோ? அப்படிப்பட்ட இம்முனிவரின் திருவடிகளை அடைக்கலமாகப் பற்றுகிறேன். ஸதாசாரங்களும் சமதமாதி குணங்களும் ஞானிகள் வணங்கும் பெருமையும் வாய்ந்து, வேதாந்த ஸாரார்த்த ஞானமுமுடைய ஸமரபுங்கவரும் இவர் திருவடிகளை ஆச்ரயித்து அவற்றை பூஜிப்பர் என்றால், இம்முனிவரிடம் ஸதாசார ஞான வைராக்யாதி குணங்கள் எவ்வளவு பூர்ணமாக இருக்கவேண்டுமென்பது, கைமுதிக ந்யாயத்தாலே ஸித்தமான தொன்றன்றோ? இத்தால் "ஒப்பற்ற ஞான வைராக்யாதிகளை யுடைவர் இந்த ராமாநுஜ முனிவர்" என்றது ஸூசிப்பிக்கப் பட்டதாகும். (கக)

12. அவதாரிகை:— இப்படித் திருவடிகளின் ப்ரபாவத்தைக் கூறிப் பின்னும் இந்த வாநாத்ரி முனிவரின் வைராக்யம் பக்தி ஞானம் என்ற குணங்களில் ஒவ்வொரு குண விஷயத்திலும் ஒருவரிருவரை உபமானமாகக் கூறி "இவருக்கு ஒப்பாமவர் உலகில் ஒருவரும் இலர்" என்கிறார்.

वैराग्यं यदि वायु-शन्तनुसुताधिक्षेपदक्षं परा
भक्तिश्चे च्छठवैरिमुख्य-पदवी-बद्धानुसारा परम् ।
ज्ञानं यद्यपि नाथयामुन-यतिप्रौढादि-शैली युतं
तस्मा द्वानमहाद्रि-लक्ष्मणमुनेः को वा जगत्यां समः ॥ १२॥

பதவுரை:—வாநாத்ரி லக்ஷ்மணமுநே: - வாநாத்ரி ராமாநுஜ முனிவரது, வைராக்யம் - வைராக்யம் என்னும் குணம், யதி(வர்ண்யதே)-நிரூபணம் செய்யப்படுமேயானால், (வாயு... தக்ஷம்) வாயு - வாயு தேவனுடையவும், சந்தனு - சந்தனு மஹாராஜனுடையவும், ஸுத - புத்ரர்களான அநுமானை

யும் பீஷ்மனையும், அதிக்ஷேப - நிந்திப்பதில் (குறைகூறுவதில்) தக்ஷம் - ஸாமர்த்த்யம் வாய்ந்ததாக, ஸ்யாத் - ஆகும். பரா - உயர்ந்த, பக்தி: - இந்த முனிவரின் பக்தியானது வர்ண்யதே சேத்-நிரூபணம் செய்யப்படில், (சட...ஸாரா) சடவைரிமுக்ய - நம்மாழ்வார் முதலிய ஆழ்வார்களுடைய, பதவீ - பக்திமார்க்கத்தோடு, பத்தாநுஸாரா - ஸம்பந்தப்பட்ட தொடர்ச்சியை உடையதாக, ஸ்யாத்-ஆகும், பரம்-மேலான, ஞானம் அபி-இவரது ஞானமும், வர்ண்யதேயதி-பேசப்படுமேயானுல், (நாத...யுதம்) நாத-நாதமுனிகளென்ன, யாமுந - ஆளவந்தாரென்ன, யதிப்ரௌட - ஸ்ரீராமாநுஜனென்ன, ஆதி - இன்னும் மணவாளமாமுனிகள் பர்யந்தமான் ஆசார்யர்களுடைய, சைலீ - ரீதியோடு, யுதம் - சேர்ந்ததாக, ஸ்யாத்-ஆகும். தஸ்மாத்-ஆகையினுலே, வாநாத்ரிலக்ஷணமுநே: - வாநமாமலை ராமாநுஜ முனிவருக்கு, ஜகத்யாம் - இவ்வுலகில், ஸம: - ஒப்பாவார், கோ வா ஸ்யாத்-யார் ஆகக்கூடும், ஒருவருமில்லை யென்றபடி.

கருத்து :—இந்த வாநாத்ரி முனிவரது வைராக்யத்தைப் பற்றி ஆராய்வோமானுல், "அந்யத்ரபீஷ்மாத்" என்ற வசனத்தின்படி வைராக்யத்தில் சிறந்தவராகக் கூறப்படுமவர்களான அனுமானுடையவும் பீஷ்மருடையவும் வைராக்யத்தையும் குறைகூறக்கடவதா யிருக்கும். இவருடைய வைராக்யமே அவ்விருவருடைய வைராக்யத்திலும் சிறந்தது என்பது கீழே விளக்கப்பட்டிருப்பது காணலாம். இத்தால் வைராக்யத்தில் இவருக்கு ஒப்பாவாரொருவருமில்லையெனக் கூறப்பட்டது. மிகவும் மேலான இவரது பகவத்பக்தியை நன்கு நிரூபணம்செய்தால் நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் முதலியோரின் பக்திமார்க்கத்தோடு தொடர்பு உள்ளதாயிருக்கும். இத்தால் ஆழ்வார்களின் பக்தியை இவர் பக்திக்கு உபமானமாகக் கூறலாம் என்றபடி. மிகச் சிறந்த இவரது ஞானத்தை ஆராயப் புகுந்தால், நாதமுனிகள், ஆளவந்தார்,

எம்பெருமானுர், மணவாள மாமுனிகள் இவர்களின் ஞானத்தின் ரீதியை இவரது ஞானம் உடையதாக ஆகும். இத்தால் பூர்வாசார்யர்களின் ஞானத்தோடொத்த ஞானத்தை உடையவர் எனத் தேற்றறு. இப்படிப்பட்ட ஞான பக்தி வைராக்யங்களை யுடையராய் இருப்பதால் உலகில் இம் முனிவர்க்கு ஒப்பாவார் ஒருவருமில்லை என்கிருர். இங்கு கீழே ஞான பக்தி வைராக்யங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் உபமானமாக சிலரைக் கூறியிருக்க (கோவாஜகத்யாம்ஸம:) உலகில் ஒப்பாவார் யார்? எனக் கேட்பது அஸம்பாவிதமன்றே? எனச் சிலர்க்கு சங்கை பிறக்கக்கூடுமல்லவா? அதற்குப் பரிஹாரம் என்? என்னில், வைராக்யத்திற்கு அனுமான் பீஷ்மர் இருவரையும், பக்திக்கு நம்மாழ்வார் முதலிய பல ஆழ்வார்களையும், ஞானத்திற்கு நாதமுனிகள் முதலிய பல ஆசார்யர்களையும் இவர் உபமானமாகக் கூறியதால், ஒவ்வொரு குணத்திற்கே இவர் குணப் பெருமையால் பலரை உபமானமாகக் கொள்ளவேண்டி யிருப்பது தெளிவு. எனவே எல்லா குணங்களும் சேர்ந்து திரண்டு இருக்கும் இவரைப் போன்ற அக் குணங்களுக்கு ஆச்ரய மில்லாமை ஸித்திப்பதால் இவருக்கு ஒப்பாவார் யார் என்ருர். அன்றியே இவரது வைராக்ய பக்தி ஞானங்களுக்கு தெய்வாம்சம் வாய்ந்தவர்களும், பகவதாஜ்ஞையால் ஆழ்வார்களும் ஆசார்யர்களுமாய் அவதரித்த நித்யஸூரிகளும் ஒப்பாமதொழிய இவ்வுலகில் கர்மமடியாகப் பிறந்தார் ஒப்பாவரோ? என்றுமாம். அல்லது அக்காலத்திலுள்ளார் ஒப்பாமதொழிய இக்காலத்தவர் ஒருவராவது இவரோடு ஒப்பாமவர் உளரோ என்றுமாம். "ஜகத்யாம்" (இவ்வுலகில்) எனக் கூறியதால், அவ்வுலகில் ஸ்ரீவைகுண்டத்தில் உள்ளவர் ஒப்பாவர் எனத் தேறுகிறதல்லவா? எனவே கீழ்க் கூறியவாறு ஆழ்வார்கள் ஆசார்யர்கள் உபமானமாகக் கொள்ளப்படுவதில் ஆக்ஷேபம் ஏதுமில்லை என்பதும் உணரத் தக்கது. (கஉ)

13. அவதாரிகை :—கீழ் ச்லோகத்தில் இவரது ஞான பக்தி வைராக்யங்களுக்கு ஒப்பாவார் ஒருவருமில்லை என்றார். இந்த ச்லோகத்தில் பகவத் கைங்கர்ய விஷயத்திலும், பகவத் பஜந விஷயத்திலும், பாகவத ஸேவா விஷயத்திலும் ஆசார்ய சரணகமலார்ச்சன விஷயத்திலும் ஒவ்வொன்றுக்கும் ஒரோருவரை உபமானமாகக் கூறி, இவரது ஒப்பற்ற தன்மையை நிரூபணம் செய்து, இவரே சிறந்த குணங்கட்கெல்லாம் முக்கியமான உறைவிடம் என்கிறார்.

कैङ्कर्यं यदि वानशैल-कमलाकान्तस्य शेषक्रमा
त्प्रीति श्चेत्कुलशेखरस्य भजने तद्भक्तपूजाविधौ ।
आचार्याङ्घ्रि-सरोरुहार्चनविधौ यद्युज्ज्वलाः प्रक्रिया
स्तास्ता मञ्जुकवे गुणैकसदनं वानाद्रि-योगीश्वरः ॥ ॥१३॥

பதவுரை :—அஸ்ய-இந்த முனிவருடையதான, முனிவர் செய்த என்றபடி, (வாந...காந்தஸ்ய) வானசைல - வானமாமலை என்ற திருநாமமுள்ள, கமலாகாந்தஸ்ய - லக்ஷ்மீவல்லப விஷயமான, கைங்கர்யம் - மண்டப ப்ராகாராதி நிர்மாணரூபமான திருப்பணிகள், நிரூப்யதே யதி - ஆராயப்படுமாயின், சேஷக்ரமாத் - ஆதிசேஷனுடைய "சென்றால்குடையாம்" என்ற கைங்கர்ய க்ரமத்தை அநுஸரித்ததாக, ஸ்யாத் - ஆகும். பஜநே - அந்த எம்பெருமானை பஜிக்கும் விஷயத்திலும், தத்பக்தபூஜாவிதௌ-அவ்வெம்பெருமானிடம் பக்தி பூண்ட பாகவதர்களை ஆராதிக்கும் விஷயத்திலும், அஸ்ய - இம்முனிவரது, ப்ரீதி: - சந்தோஷமானது, நிரூப்யதே சேத்-ஆராயப்படின், குலசேகரஸ்ய (இவ) குலசேகர ஆழ்வாருடையது (போல), ஸ்யாத்-ஆகும், அஸ்ய - இம்முனிவரது, (ஆசார்யா...விதௌ) (ஆசார்ய) ஆசார்யனுடைய, அங்க்ரிஸரோருஹ - தாமரை போன்ற திருவடிகளின், அர்ச்சநவிதௌ-அர்ச்சந ப்ரகாரத்

தில், உஜ்வலா : - நன்கு விளங்குகின்ற, தா : தா:-அந்தந்த ப்ரக்ரியா : - ப்ரகாரங்கள், அநுஷ்டானங்களென்றப்படி, யதி நிரூப்யந்தே - ஆராயப்படுமானுல், மஞ்ஜுகவே: (இவ)-ஸ்ரீமதுரகவிகளுடையது போன்றதாக, (ஸ்யாத்) ஆகும், (ஆகையால்) வாநாத்ரியோகீச்வர : - வாநாசல முனிவர், குணகஸதநம்-குணங்கட்கெல்லாம் முக்யமான உறைவிடமாக (ஆகிருர்.) (கசு)

கருத்து:—இம்முனிவர் வானமாமலை எனத் திருநாமம் பூண்ட ச்ரிய :பதிக்குச் செய்தருளிய பலவித கைங்கர்யங்களையும் ஆராயின், அவை பலவாகையாலே, "சென்றுல் குடையாம்'', "நிவாஸசையாஸந'' என்கிற வசனங்களின்படி பல கைங்கர்யங்களையும் செய்து போரும் ஆதிசேஷனுடைய ரீதியை(க்ரமத்தை) அநுஸரித்ததாகக் கூறலாம். அவ்வானமாமலை எம்பெருமானை பஜிக்கும் விஷயத்திலும் அவனது பக்தர்களை பூஜிக்கும் விஷயத்திலும் இவரது ஆர்வத்தை ஆராய்ந்தால் குலசேகர ஆழ்வாருடைய ஆர்வத்தை யொத்ததாகக் கூறலாம். ஆசார்ய சரணாரவிந்தத்தை அர்ச்சிக்கும் க்ரமத்தில் ஒப்புயர்வற்ற இம் முனிவரின் அந்தந்த ப்ரகார விசேஷங்கள் ஆராயப்படுமானுல் அவ்வவஅநுஷ்டானங்கள் ஸ்ரீமதுரகவி யாழ்வாருடையன போன்றனவாகும். எனவே இம்முனிவர் சிறந்தகுணங்களுக்குக் கொள்கலமாவார் என்கிருர். இங்கு "வாநசைல கமலாகாந்தஸ்ய'' என்ற இடத்தில் வானசைல என்று ஊரைச் சொல்லி, "கமலாகாந்தஸ்ய'' என்று அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் எனக் கொள்வது "வானமாமலையே'' என்று எம்பெருமானையும் "சிரீவரமங்கலநகர்'' சிவரமங்கை என்று திருப்பதியையுங் கூறிய நம்மாழ்வார் ஸ்ரீஸூக்திகளோடு பொருந்தாது. அன்றியே "வைகுண்ட'' என்ற சப்தம் "வைகுண்டோவிஷ்டரச்ரவா:'' என்று எம்பெருமானுக்கும், "வைகுண்டேது பரே லோகே'' என்று

ஸ்தானத்திற்கும் பேராகக் கொள்ளபபடுமா போலே அத் திருப்பதிக்கும் பேராகக் கொள்ளப்படினும் குற்றமில்லை. இந்த ந்யாயத்தைக் கொண்டுதான் வானமாமலை என்று அவ் வூருக்கும் பேராகத் தற்காலம் எல்லோராலும் வழங்கப் பெற்று வருகிறது என்பது உணரத்தகும். இவ்விராமானுஜ முனி பல கைங்கர்யங்களைச் செய்ததால், ஆதிசேஷனின் கைங்கர்யத்தை யநுஸரித்தது இவரது கைங்கர்ய மென்றார். "சேஷக்ரமாத்" என்பதற்கு "சேஷக்ரம மநுஸ்ருத்ய" என்று "ல்யப்லோபே பஞ்சமீ" எனக் கொண்டு அர்த்தம் கூறப்பட்டது. பகவத் பஜனத்திலும் ஸ்ரீவைஷ்ணவ பூஜா விஷயத்திலும் மற்றை ஆழ்வார்களை விட்டு ஸ்ரீகுலசேகரரை இவர் உபமானமாகக் கொள்வான் என்? என்னில், அவ்வாழ் வாருடைய பஜநப்ரகாரம் விலக்ஷண்மல்லவா? பகவத் ஸம்பந் தம் பெற்ற தேசமே அமையும்; அத்தேசத்திலும் ஞானத் திற்கு அடைவில்லாத திர்யக் ஸ்தாவர ஜங்கமங்களும் அமை யும் என்று நினைத்து "குருகாய்ப் பிறப்பேன்," "மீனாய்ப் பிறக்கும் விதியுடையனாவேன்", "தம்பகமாய் நிற்கும் தவ முடையேன் ஆவேன்", "படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேன்" என்றாரல்லவா? அதுபோலவே இம்முனிவரும் அவனுகந்த திருப்பதியில் "ஏதேனுமாவேன்" என்ற அத்யவ ஸாயம் பெற்றவர் என்றபடி. பாகவதர்களை ஆராதிக்கும் விஷயத்திலும் "ஆரங்கெடப் பரனன்பர் கொள்ளாரெனக் குடப்பாம்பில் கையிட்ட" ஸ்ரீகுலசேகராழ்வாரைப் போலே ஸ்ரீவைஷ்ணவ விஷயத்தில் கூறப்படும் தோஷலேசத்தையும் ஸஹியாது பரிந்து அவர்களை பூஜிக்குமவர் என்று தோற்று கைக்காக இந்த உபமானம். இனி இம்முனிவர் தமது ஆசார் யனை மணவாளமாமுனிகளின் திருவடிகளை அர்ச்சிக்கும் க்ரமங்களும், அந்தந்த ப்ரகாரங்களும் மதுரகவி நிலையை ஒத்ததாகும். அதாவது—அவர் "தேவுமற்றறியேன்" என்று ஆழ்வாரையே தெய்வமாகப் பற்றினாப்போலே இவ ரும் "ஆசார்யதேவோ பவ" என்கிறபடியே ஆசார்ய

னையே தேவனாகக் கொண்டு அர்ச்சிக்கும் நிலையாகும். ஆயின் இவருக்கு பகவத் கைங்கர்யத்தில் ப்ரவ்ருத்தி சேருவது எங்ஙனே என்னில்? ஆசார்ய முகோல்லா ஸார்த்தமாகச் செய்கையாலே சேரும். இதுதான் "ப்ரீத்யை பரம் வர வரஸ்ய" என்றவிடத்தே கூறப்பட்டதாகும். "மஞ்ஜு கவி :" என்றது மதுரகவி என்றபடியாம். (கஙு)

14. **அவதாரிகை :**—ஆக இவ்வளவும் வர வாநாத்ரி முனிவரது ஞானம், பக்தி, வைராக்யம், பகவத்கைங்கர்யம், பகவத்பாகவத ப்ராவண்யம், ஆசார்ய பாதார்ச்சனம் முதலிய வற்றை உபமானமுகத்தாலே சிறப்பித்துக் கூறி அவ்வழி யாலே இவர் ப்ரபாவத்தைக் கூறியவர் எம்பெருமானே நரநாரணனாய் உலகத்தறநூல் சிங்காமை விரித்தாப் போலே, ஞானப்ரதானம் செய்து உலகினை உய்விக்க விரும்பிய ஆதிசேஷனே அநேகாவதாரம் செய்தவர் என்றும் ஸ்ரீமங் மணவாள மாமுனிகளாகவும் அவரது சிஷ்யரான வானமாமலை ராமானுஜமுனிவராயும் அவதரித்தவரும் அவரே என்றும் இவரது அநந்தாவதாரத்வத்தை அருளிச் செய்து அவ் வழியாலே அவரது ஒப்புயர்வில்லாப் பெருமையை உணர்த்துகிறார் இந்தக் கடைசி ச்லோகத்தால்.

शिष्याचार्य-तनुद्वयं निरभज त्प्रायेण लक्ष्मीपति
र्ह्येको ऽभून्नरसंज्ञक स्तदपरो नारायणाख्यः पुरा ।
अद्य त्वेकतरः कृपामृतनिधि स्सौम्योपयन्ता मुनि
स्तच्छिष्याग्रसरो ऽपरो विजयते रामानुजाख्योमुनिः ॥ ॥१४॥

லக்ஷ்மீபதி: - லக்ஷ்மீ வல்லபனான எம்பெருமான், ஆத்மாநம்-தன்னை (ப்ராயேண்) - அநேகம் தடவை, சிஷ்யா சார்யதநுத்வயம் - சிஷ்யனென்னும் ஆசார்யனென்னும் இரு சரீரங்களையுடையவனாக, நிரபஜத் - பகுத்தான், ஏக: - அவ் விருவரில் ஒருவன், புரா - முற்காலத்தில், நரஸம்ஞக: - நர

னென்ற பெயரையுடையவனுக, அபூத் - ஆனுன், ததபர: - அவனில் வேருன மற்றவன், நாராயணுக்ய: - நாராயண னென்ற பெயரை உடையவனுக, அபூத் - ஆனுன், அத்யது- இப்பொழுதோவென்ருல், க்ருபாம்ருதநிதி: - க்ருபையென் னும் அமுதம் பொதிந்த கடலாகிய, ஸௌம்யோபயந்தா முநி:- அழகிய மணவாளமாமுனிகள், ஏகதர:-அந்த சிஷ்யா சார்யர்களுள் ஒருவரான ஆசார்யராக, விஜயதே - விளங்கு கின்ருர், (தத்சிஷ்யாக்ரஸர:) தத் - அந்த மாமுனிகளின், சிஷ்ய - சிஷ்யர்களுள், அக்ரஸர: - முதல்வரான, ராமானு ஜாக்ய: - ராமானுஜனெனப்பெயர்பூண்ட, முநி : - வாநாத்ரி முநிவர், அபர: -அந்த சிஷ்யாசார்யர்களுள் வேருெருவரான சிஷ்யராக, விஜயதே-விளங்குகின்ருர்.

கருத்து :—ச்ரிய : பதியான எம்பெருமான் லோகோஜ் ஜீவனார்த்தமாகத் திருமந்த்ரத்தை வெளியிட எண்ணங் கொண்டு தான் நரனுயும் நாராயணுகவும் அவதரித்தான், பின்னும் ஸ்ரீ கண்ணனுயும் அர்ஜுநனாயும் அவதரித்தான் அல்லவா? அதுபோலவே திருவநந்தாழ்வானும் எம்பெரு மானுடைய நியோகத்தால் அவரித்தவர், தானே ஆசார்ய னுன மணவாளமாமுனிகளாகவும் சிஷ்யராக வானமாமலை ராமானுஜ ஜீயராகவும் அவதரித்தார் என்கிருர். ஏனெனில்- "க்ருபாம்ருதநிதி:" மாமுனிகள் கருணைக்கடலல்லவா? எனவே சிஷ்யாசார்ய க்ரமத்தை உலகத்தவர் நன்குணர்ந்து அவ்வண்ணமே தாங்களும் நடந்து உலகம் உஜ்ஜீவநத்தைப் பெறவே அவ்வாறு செய்தார் என்கிருர். லக்ஷ்மீபதி : என் றது. "தேவ்யா காருண்யரூபயா" என்று கருணுரூபிணியான பிராட்டி ப்ரேரிக்க நரநாராயணனுய் அவதரித்தான் என்ப தற்கு ஸூசகம். அதுபோலவே இங்கு மாமுனிகள் க்ருபை பிரேரிக்க ஆசார்ய சிஷ்யர்களர் யவதரித்தா ரென்பது "க்ரு பாம்ருதநிதி:" என்ற விசேஷணத்தாலே ஸூசிதமாம்.

இவ்வளவாகத் தான் ஆசார்யாபிமாநபாத்ரமாவதற்கு அதிகாரார்த்தமாகத் திருவடிகளில் சரணம் புகுந்தமையை

யும், அத்திருவடிகளின் போக்யத்வத்தையும், அவற்றின் அபேக்ஷித பல ப்ரதத்வத்தையும், அதற்குக்காரணமான மணவாள மாமுனிகளின் திருவடி ஸம்பந்தத்தையும், - அத்தால் வந்த விரக்தியின் பெருமையையும், இவரது கைங்கர்ய லக்ஷ்மியையும், .ப்ரபந்த வ்யாக்யான சக்திவிசேஷத்தையும், இவர் திருநாமத்திற்குண்டான மந்த்ரஸாம்யத்தையும் கூறி, நேராகவே திருவடிகளின் அதிபாவநத்வத்தையும், அத்திருவடிகளின் தீர்த்த தூளிகளுடைய மஹிமையையும்-அத்திருவடிகளில் ஆச்ரயித்த அப்பாச்சியாரண்ணா, போரேற்று நாயனார் இருவரையும் கூறி, இவரது ஞான பக்தி வைராக்யங்களுக்கு உலகில் ஒப்பாமவர் ஒருவருமில்லை யெனவும், பகவத் கைங்கர்யம் பகவத்பாகவதாசார்ய விஷயங்களில் இவரது நிலை, இவற்றுக்கு ஒப்புக் கூறப்புகில், அவதார புருஷர்களே ஒப்பாவர் என்றும், இவரவதாரத் தன்மையை ஸூசிப்பித்து, அவ்வளவில் பர்யாப்தி பிறவாமையாலே, ஈச்வரன் நரநாராயணனாய் நின்று திருமந்த்ரத்தை வெளியிட்டாப் போலவும், க்ருஷ்ணார்ஜுநர்களாயிருந்து ஸ்ரீ கீதையை வெளியிட்டாப் போலவும், அவ்வர்த்தங்களை எல்லாரு மறிந்து சிஷ்யாசார்ய க்ரமத்துடன் அநுஷ்டான பர்யவஸாயியாக்க ஸ்ரீ மணவாள மாமுனிகளாகிய ஆசார்யனாகவும் சிஷ்யரான வானமாமலை ராமாநுஜ முனிவராகவும் ஆதிசேஷனே அவதரித்தாரென்று ஸாக்ஷாத்தாக இவரது அவதாரத்வத்தை மஹார்யர் வெளியிட்டருளினார். இவர் மாமுனிகள் அம்சாவதாரமென்பது ககநகிரி முநிசரிதத்திலும் ஸ்ரீ வரமங்கை முனி வைபவத்திலும் வ்யக்தமாய்க் காணலாம், புரா. அத்ய - என்னும் பத த்வயங்களின் ஸ்வாரஸ்யத்தை அநுஸரித்து ஸ்ரீமந் நாராயணனே நரநாராயணர்களாயவதரித்ததுபோல வானமாமலை ராமாநுஜ முநிவராயும் ஸ்ரீ மணவாளமாமுனிகளாயும் அவனே அவதரித்தான் என அர்த்தம் கொள்ளலாமோ எனில், அப்பொழுது மாமுனிகள் சேஷாவதாரமென்ற ஆசார்ய ஸூக்திகளோடு விரோதம் வரும். எனவே

நாராயணன், நரநாராயணர்களென்கிற சிஷ்யாசார்யர்களாக் அவதரித்தது போலவே திருவநந்தாழ்வான் மாமுனிகளும் வானமாமலை ராமனுஜ முனிவருமாய்க்கொண்டு சிஷ்யாசார்யர்களாக அவதரித்தார் எனக் கொள்வதே தகுதியுடையதாகும். ஸ்ரீ மணவாளமாமுனிகளையும் இந்த ராமானுஜ முனிவரையும் ஈச்வராம்சமாகச் சொல்லுமிடங்களில் "ஸாக்ஷாந் நாராயணோதேவ:" என்று ஆசார்ய ஸாமாந்யத்தையும் பகவதம்சமாகக் கூறும் ஸாமாந்ய வசனத்தைக் கொண்டே சொன்னதாகக் கொள்ளவேண்டும். இல்லாவிடில் எம்பெருமானுர் முதலியோருக்குக் கூறப்படும் சேஷாவதாரத்வம் ஸித்தியாது. இந்த மஹார்யரென்றும் தொட்டை ஐயங்கார் அப்பை, இந்த "மங்களாசாஸநம் ப்ரபத்தி என்ற இரு க்ரந்தங்கள் போலவே தமது ஆசார்யரான வானமாமலை ராமானுஜீயர் விஷயமான "தினசர்யை" என்னும் க்ரந்தமும் அருளிச் செய்திருக்கிருர் என்பது ஸ்ரீ வரமங்கைமுநி வைபவத்தால் அறியப்படுகிறது. இந்த ப்ரபந்தங்களை ராமானுஜம் பிள்ளான் அருளிச்செய்ததாகவும் சிலர் கூறுவர்.

श्रीवानशैल-यतिराज-पदाब्ज-भृङ्ग-
श्रीमन्महार्य-रचितावतुलौ प्रबन्धौ ।
श्रीकृष्णपुर्यभिजनेन हि शौरिसूनु-
श्रीश्रीनिवासकृतिना विवृतौ विभाताम् ॥

பண்டிதரத்னம் திருக்கண்ணபுரம் ஸ்ரீநிவாஸ தாஸனுல் இயற்றப்பெற்ற உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

மங்களாசாஸநம், ப்ரபத்தி உரை முற்றிற்று.

வள்ளுவர் அச்சகம், புரசை, சென்னை-7.

ஸ்ரீ வானமாமலை மடத்து வெளியீடுகள்

(1) பிள்ளை லோகாசார்யர் அருளிச்செய்த "தத்வத்ரயம்" ஸ்ரீ மணவாளமாமுனிகளின் வ்யாக்யானத்துடன். ரூ. 3 0 0

(2) ஸ்ரீ வானமாமலை மடத்துத் தனியன் வாழித் திருநாமம் முதலியன தமிழில். ரூ. 0 8 0

(3) ,, தெலுங்கு லிபியில் ரூ. 0 8 0

(4) ,, ஸம்ஸ்க்ருதம் மாத்திரம் தேவநாகரலிபியில் ரூ. 0 6 0

(5) ஸ்ரீ வரமங்கைமுனி வைபவம் ரூ. 1 0 0

(6) ஸ்ரீ வானமஹாசல யோகி மங்களாசாஸநமும் ப்ரபத்தியும் தமிழ் உரையுடன் ரூ. 0 6 0

(7) ககநகிரி முநி குருபரம்பராப்ரபாவம் (அச்சில்)

ஏககாலத்தில் 10 புத்தகங்கள் வாங்குபவர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்கும் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

கிடைக்குமிடம் :—

ஸ்ரீ வானமாமலை மடம்,

நாங்குனேரி திருநெல்வேலி ஜில்லா.	திருவல்லிக்கேணி சென்னை.